# தென்றல்

ஆரம்பம் : 06.04.2008 பதிவு இலக்கம் : 361910

காற்று : 08 சுகந்தம் : 31 (ஐப்பசி – மார்கழி) 2015



65/=

மீரா முகைதீன் ஜமால்தீன்

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!


மின் தடைப்பட்டாலும் குளிர்ச்சியை தரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள LG பவர்கட் குளிரூட்டி
LG
Life's Good
7
மின் தடையேற்பட்டாலும்
மணித்தியாலங்கள்
தடையின்றி குளிர்ச்சியாய் வைத்திருக்கும்
மின் தடையானாலும்
எவர்கூல்
புதிய
அறிமுகம்
AD/020
(நிபந்தனைகளுக்குட்பட்டது. முன்னறிவித்தல்களின்றி விலைகள் மாற்றப்படலாம்.
இங்கு காட்டப்பட்டுள்ள உருக்கள் நிஜத்திலும் வேறுபடலாம்.)
தொடர்புகளுக்கு....
அபான்ஸ் காட்சியறை, 263, 265, திருமலை வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி இல : 065-2227895
Abans

பொதுசனநூலகம்
04 NOV 2015
மாநகரசபை
யாழ்ப்பாணம்

ஆரம்பம் : 06. 04. 2008

# தென்றல்
# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு
தொ.பே : 077 - 6983597
பெக்ஸ் : 065 - 2227542
Email:- kirupabatticaloa@yahoo.com
இணையம்:- www.thendralbook.com

**ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
திரு. வீ. கே. ரவீந்திரன் (ரவிப்ரியா)
கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை
திருமதி.கவிதா.கிருபாகரன்
கலாபூஷணம்.ஆ.அரசரெத்தினம்

**ஓவியம்**
வே. ஹோகுலரமணன்

**கணணி வடிவமைப்பு**
த.சாங்கர்

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ-ர்)

## வாசிப்பின் முக்கியத்துவம்!!!

இன்றைய நவீன யுகத்தில் பல்வேறு வேலைப்பழுக்களின் மத்தியில் வாசிப்பு அருகிச் செல்வதை பல்வேறு ஆய்வுகள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

இந்நிலையில் பாடசாலை மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தைக் கைவிட்டு, தேடலின்றி வெறும் புத்தகப் பூச்சிகளாக உள்ளனர். இவர்களின் தேடல் அருகிச் செல்வதற்கு வாசிப்புப் பழக்கம் இன்மையே காரணமாக அமைகிறது.

இக்காலகட்டத்தில் இணையத்தின் வருகை காரணமாக பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிப்பதில் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்கள் வரை ஈடுபாடு காட்டுவதில்லை.

இந்நிலையைப் போக்குவதற்கு பாடசாலை நூலகங்களில் மாணவர்களின் வாசிப்புத் திறனை அதிகரிக்க பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ஒவ்வொரு பாடசாலை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

அதிபர்களும், ஆசிரியர்களும், பாடசாலை அபிவிருத்திக் குழுவினரும் இணைந்து மேற் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

எனவே **"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்"** என்ற முதுமொழிக்கமைய ஒவ்வொருவரும் தத்தமது அன்றாடக் கடமைகளில் குறிப்பிட்ட சில நிமிடங்களையாவது வாசிப்பதற்காக ஒதுக்கிக் கொள்ள வேண்டும். இதன் மூலமாக எமது எதிர்காலம் சிறப்பானதாக அமையும்.

என்றென்றும் அன்புடன்

-ஆசிரியர்-

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 300/= | US$20 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$100 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

**அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.**

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும், தொன்மையான, தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமி யங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கி யங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற் றைப் பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும் போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

கலாபூஷணம் ஆறுமுகம் அரசரெத்தினம்-



# பாயிரம் இல்லது பனுவல் அன்றே

உலகில் உள்ள மூத்த மொழிகளுள் ஒன்றான தமிழ் மொழியில் **"நூல்"** என்பதற்கு நன்னூல் சிறப்பான விளக்கம் கூறியுள்ளது. பஞ்சிலிருந்து எடுக்கப்படுகின்ற நூல் போன்றது என்றும், மரங்களை அறுப்போர் அவற்றி லுள்ள கோணல் - மாணல்களை நீக்குவதற்காக அடையாளமிடுகின்ற நூல் போன்றது என்றும் விளக்கம் கூறப்பட்டுள்ளது. **"ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும் பாயிரம் இல்லது பனுவல் அன்றே"** (நன் -சிற – 54) என்பது நன்னூல் சூத்திரம். பனுவல் என்பது நூலைக் குறிக்கும். ஆயிரம் விதமாக அகன்று விரிந்திருப்பினும் அந்த நூலுக்கு **"பாயிரம்"** இல்லையானால் அதனை **"நூல்"** என்று ஏற்க முடியாதென நன்னூலார் கூறுகின்றார்.

**"முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்**
**புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்"** –(நன்- பொது- 01)

என்பதன்படி இதில் குறிப்பிட்ட பெயர்களெல்லாம் **"பாயிரம்"** என்பதன் ஒத்த கருத்துள்ள சொற்களாகும். பழந்தமிழ்ச் சொல்லான **"பாயிரம்"** என்பதைப் பரீட்சை வினாக்களில் பார்த்தவுடன் பயந்து விடுகின்ற ஒரு போக்கு

இப்பொழுது காணப்படுகிறது. **"ஒரு நூலைப் பற்றி புலமையும்- தகைமையும் வாய்ந்த ஒருவர் வழங்குகின்ற அணிந்துரையே பாயிரம்"**– என்பதை விளங்கிக் கொண்டால் விடை இலகுவாகிவிடும். ஒரு நூலைப் பற்றி முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்களைத் தெளிவாகத் தெரியப்படுத்துவதே பாயிரம் ஆகும். பாயிரம் பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம் என இருவகைப்படும்.

**"நூலே நுவல்வோ னுவலுந் திறனே**
**கொள்வோன் கோடற் கூற்றா மைந்தும்**
**எல்லா நூற்கு மிவை பொதுப் பாயிரம்"** - (நன்- பொது- 03)

நூலின் வரலாறு, நூலாசிரியரின் வரலாறு, நூலாசிரியன் மாணாக்கனுக்கு நூலைச் சொல்லுதலின் வரலாறு, மாணாக்கனின் வரலாறு, மாணாக்கன் கேட்டலின் வரலாறு ஆகிய இவ்வைந்து வரலாற்றையும் விளங்க உணர்த்துவது பொதுப் பாயிரம் ஆகும்.

முதநூல், வழிநூல், சார்பு நூல் என நூல்களை மூன்றாக வகுத்தனர். இயல்பாகவே வினையினின்று நீங்கித் தானே விளங்கிய அறிவினையுடைய கடவுள், உயிர்களுக்காக ஆதிகாலத்திலே செய்தது முதனூலாம். இதற்கு உதாரணமாக இறைவனால் அருளப்பட்ட வேதங்கள், திருக்குர்ஆன், பைபிள் என்பவற்றைக் கூறலாம்.

**"வினையி னீங்கி விளங்கிய வறிவின்**
**முனைவன் கண்டது முதனூலாகும்"** (நன் - பொது- 05)

முதனூலில் சொல்லப்பட்டுள்ள விடயங்களைக் காலத்திற்கேற்ப சுருக்கியும் - விளக்கியும் - வகுத்தும்- தொகுத்தும் **"இறந்தது விலக்கல்"** எனும் விதிமுறைக் கேற்ப நூல் இயற்றும் காலத்து வழக்கொழிந்தவைகளை விலக்கியும் **"எதிரது போற்றல்"** என்பதற்கு ஏற்ப நடைமுறையில் உள்ளவற்றைச் சேர்த்தும் முதனூலை பெரிதும் ஒத்ததாகவும் தான் செய்யும் வேறுபாடுகள் அறிவுடையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அழியாது நிலை பெற்று விளங்கும் தன்மையுடையதாக இருப்பதே **"வழி நூல்"** ஆகும். இதனை இச்சூத்திரம் விளக்குகிறது.

**"முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்**
**பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி**
**அழியா மரபினது வழி நூலாகும்"** – (நன்- பொது -07)

புறப்பொருள் வெண்பாமாலை, அகப்பொருள் விளக்கம், நேமிநாதம், வீரசோழியம், நன்னூல், யாப்பருங்கலக் காரிகை, மாறனலங்காரம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து முதலியன இலக்கண விதிகளுக்குரிய வழி நூல்களுக்கான சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.

சார்பு நூல் என்பது முதனூல், வழி நூல்களுக்குச் சிறுபான்மை ஒத்து பெரும்பாலும் வேறுபட்டிருக்கும். விசாகப்பெருமாள் ஐயர் எழுதிய அணியிலக்கணமும், சேர்.பொன்.இராமநாதன் எழுதிய செந்தமிழ் இலக்கணம் என்பனவும் இக்காலப் பேராசிரியர்கள் இலக்கணம் சம்பந்தமாக எழுதுகின்ற இலக்கண நூல்களும், சைவ சித்தாந்தங்களுக்கு எழுதப்பட்ட சார்பு நூல்களுக் கான எடுத்துக் காட்டுக்களாகும்.

நூலாசிரியர் பெயரும், நூல் வந்த வழியும், நூல் வழங்கும் பிரதேசமும், நூலினது பெயர் விளக்கமும், நூல் முற்றுப் பெற்ற பின்பு இந்நூல் கேட்கத் தகும் எனும் இயைபும், நூலில் சொல்லப்பட்ட பொருளும், நூலால் பயன் பெறக்கூடியோர் யாரென்பதும், நூலைப் படிப்பதால் ஏற்படும் பயன்களும் ஆகிய எட்டும் சிறப்புப் பாயிரத்தில் அடங்கியிருத்தல் வேண்டும் என்பதைப் பின்வரும் சூத்திரம் கூறுகிறது.

**“ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை**
**நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே**
**கேட்போர் பயனோ டாயெண் பொருளும்**
**வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே”** – (நன்- சிற- 47)

மேற்கூறிய எட்டு விடயங்களோடு நூல் செய்த காலம், நூல் அரங்கேற்றிய சபை, நூல் செய்தற்கான காரணம் ஆகிய மூன்றையும் சேர்த்து பதினொரு விடயங்களைச் சிறப்புப் பாயிரத்தில் கூறுவோரும் உளர் என்பதை இச்சூத்திரம் கூறுகிறது.

**“காலங் களனே காரண மென்றிம்**
**மூவகை யேற்றி மொழி நரு முளரே”** (நன்- சிறப்பு- 48)

தன்னுடைய ஆசிரியனும் - தன்னோடு பாடம் கற்ற சகபாடியும், தன்னுடைய மாணாக்கனும் - தன் நூலுக்குத் தகுந்த உரையாசிரியரும் சிறப்புப் பாயிர உரையை வழங்குவதற்கு ஏற்புடையோராவர் என்பதை இச்சூத்திரம் விளக்குகிறது.

**“தன்னா சிரியன் றன்னொடு கற்றோன்**
**றன்மா ணாக்கன் றகுமுறை காரனென்**
**றின்னோர் பாயிர மியம்புதல் கடனே”** – (நன்- சிறப்பு- 51)

இதனாலேதான் இப்பொழுது நூல்களை எழுதுவோர் அந்நூல்களுக்கு அணிந்துரை எழுதும் தகைமை பெற்ற பேராசிரியர்களை நாடிச் செல்கின்றனர். அணிந்துரை எழுதுவோர் நூலாசிரியர் பற்றியும், நூலின் உள்ளடக்கம் பற்றியும், அதன் சிறப்புக்கள் பற்றியும் நடுவுநிலையில் நின்று சுருக்கமாகவும்- தெளிவாகவும் குறிப்பிட்டிருந்தால் அதனைப் படிப்போர் நூலின் அவசியத்தைத் தெரிந்து கொள்ள முடியும்.

மாளிகைக்குச் சித்திரமும், பெரிய பட்டணத்திற்குக் கோபுரமும், மங்கையருக்கு ஆபரணமும் போல நினைத்து அழகிய பொருளைச் சொல்லுகின்ற பாயிரத்தை உரைத்து எவ்வகைப்பட்ட பெரிய நூலுக்கும் முதலிலே பெரும்பாலும் இதனைச் சேர்த்து வைத்தார்.

**“மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமும்**
**ஆடமைத்தோ ணல்லார்க் கணியும் போல் - நாடி முன்**
**ஐதுரையா நின்ற வணிந்துரையை யெந்நூற்கும்**
**பெய்துரையா வைத்தார் பெரிது”** – (நன்- சிறப்பு- 55)

இக்காலத்தில் வெளிவருகின்ற நூல்களிலே ஆசியுரை, முன்னுரை, அணிந்துரை, பதிப்புரை, அறிமுகவுரை, வெளியீட்டுரை, நயவுரை என்பனவாய தலைப்புக்களில் எழுதப்பட்டிருப்பவைகளும் பாயிரத்தின் பகுதிகளே எனக் கொள்ளலாம். அத்தோடு நூலின் பொருளடக்கமும் நூலின் தன்மையை உணர்ந்து கொள்ள உதவுகிறது. பெரிய நூல்களை எழுதியோர் காண்டம், படலம், இலம்பகம், காதை, அத்தியாயம் என்று பிரித்து ஒழுங்குபடுத்தியுள்ளனர். இதற்கு விளக்கம் எழுதுவோர் இவ்வாறு பிரித்து வகுத்தமைக்குரிய காரணங் களை விளக்கி எழுதுவர்.

திருவள்ளுவர் திருக்குறளை அறம், பொருள், இன்பம் எனப் பிரித்து ஒழுங்குபடுத்தியமைக்கும் 133 அதிகாரங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக வகுத்து வைத்தமைக்கும் உரிய சிறப்புக்களை எடுத்துக் கூறுவர். ஒவ்வொரு அதிகாரத்திலும் உள்ள பத்துக் குறட்பாக்களையும் வரிசைப்படுத்தியமைக்கும் பொருத்தமான காரணங்களைச் சிறப்பித்துக் கூறுவர்.

இதுவரை கூறியவற்றைத் தொகுத்துப் பார்க்கும் போது பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம் ஆகிய இரண்டினுள்ளும் முக்கியமாக என்னென்ன விடயங்கள் அடங்கியிருக்க வேண்டும் என்பதையும், அப்பாயிரங்களை வழங்கக் கூடிய தகைமையுடையோர் யாரென்பதையும் உணரலாம். கட்டுரையின் தொடர்ச்சியாக அடுத்த இதழிலே தொல்காப்பியம், நன்னூல், சிலம்பு கூறல் ஆகிய நூல்களின் பாயிரங்களில் இவ்விடயங்கள் கூறப்பட்டுள்ள முறையினை விளக்குவாம்.

(தொடரும்...)

## முகப்பில்...

உங்கள் அபிமானத் **"தென்றல்"** தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்காக நடத்திய முன்னோடிப் போட்டிப் பரீட்சை – 04 இல் முதலாம் இடத்தைப் பெற்ற மட்/ கொக்கட்டிச்சோலை இ.கி.மி.வித்தியாலய மாணவி ச.டிதுர்ஷிகாவுக்கான (181) தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழினை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் வழங்கிக் கௌரவிப்பதைக் காணலாம். மாணவர் களுக்கு வழங்கப்பட்ட பதக்கங்களுக்கான அனுசரணையினை உலக நண்பர்களின் தேவைகளுக்கான அமைப்பின் பணிப்பாளர் ஏ.கங்காதரனும், சான்றிதழுக்கான அனுசரணையினை மட்டு.மாவட்ட அரச ஒப்பந்தக்காரரர் சங்கத் தலைவர் வீ.றஞ்சிதமூர்த்தியும், நான்கு பதக்கம் பெற்ற மாணவிக்கான சிறப்புப் பரிசிலுக்கான அனுசரணையினை ஆரையம்பதி அபிராமி ஜுவல்ஸ் தொழிலதிபர் க.பாக்கியராஜாவும் வழங்கியிருந்தனர்.

(படம் +தகவல் : வா.கிருஷ்ணா, வே.சத்திவேல்)

## மீரா முகைதீன் ஜமால்தீன்



அம்பாறை மாவட்டத்தின் இயற்கை எழில் கொஞ்சும் சாய்ந்தமருதில் பிறந்து, கலை-இலக்கியப் பணியாற்றி வரும் மீராமுகைதீன் ஜமால்தீனைத் **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பெருமை கொள்கிறது.




**- க. கிருபாகரன் -**

### குடும்பப் பின்புலம்

இவர் சாய்ந்தமருதில் 16.04.1960 இல் பிறந்து, தனது திருமண பந்தத்தின் காரணமாக ஏறாவூரில் வசித்து வருகிறார்.

### பாடசாலைக் காலம்

தனது கல்வியை கமு/சாய்ந்தமருது றியாளுள் ஜன்னாஹ் வித்தியாலயம், கமு/கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை ஆகியவற்றில் கற்றார். அத்தோடு சமயக் கல்வியை தர்காநகர் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக்கல்லூரியிலும் கற்றுச் சமய அறிவையும் விருத்தியடையச் செய்தார்.

### தொழில்

ஏறாவூர் அஞ்சல் அலுவலகத்தில் 8 வருடங்கள் பணிபுரிந்துள்ளார். தற்போது ஏறாவூர் வாளியப்பா ஜும்ஆ மஸ்ஜித்தில் கடமைபுரிகிறார்.

**எழுத்துத் துறை பத்திரிகைகள்/சஞ்சிகைகள்**

1983 இலிருந்து பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதி வருகிறார். இவரது கன்னிக் கவிதையாக தினகரன் பத்திரிகையில் **"கெட்ட புத்தி"** பிரசவம் கண்டது. மேலும் இவரது எழுத்துத் துறைக்கு தினபதி, சிந்தாமணி, சூடாமணி, வீரகேசரி, தினகரன், சுடர்ஒளி, தினக்குரல், மித்திரன் வாரமலர், விடிவெள்ளி, நவமணி, எழுச்சிக்குரல், பாமிஸ், பார்வை, இடி, முஸ்லீம் குரல், உதயம், மீள்பார்வை, எங்கள் தேசம் போன்ற பத்திரிகைகளும் - **"தென்றல்"**, செங்கதிர், பூங்காவனம், ஓசை, நிதாஉல் இஸ்லாம் போன்ற பல சஞ்சிகைகளும் களம் தந்ததாகப் பெருமிதத்தோடு **"தென்றல்"** க்குத் தெரிவித்தார்.

**வானொலி**

கவியாரம், இளைஞர் இதயம், இஸ்லாமிய நற்சிந்தனை போன்றவற்றில் பிரதியூடாகப் பங்குபற்றியுள்ளார்.

**வெளியிட்ட பத்திரிகைகள்**

- அஸ்ஹூதா (உதவி ஆசிரியர்)
- பூவிழி (உதவி ஆசிரியர்)
- மருதம் (ஆசிரியர்)
- அஷ்ஷிபா (ஆசிரியர்)

**எழுதி வெளியிட்ட நூல்கள்**

- புரவலர் புத்தகப் பூங்காவால் வெளியீடு செய்யப்பட்ட **"தடயங்கள்"** (கவிதைத் தொகுதி) - 2008)
- ரமழான் ஸலவாத் (12.8.2010)
- கிழக்கின் பெருவெள்ளக் காவியம் (2008)
- முஹம்மது (ஸல்) புகழ்மாலை (27.03.2011)
- இஸ்லாமிய கீதங்கள் (2012)
- தாலாட்டு குழந்தைப் பாடல் (2015)

**வெளியிடவுள்ள நூல்கள்**

- பத்ர் யுத்தம் (ஸலவாத் மாலை)
- நெறிதவறாப் பாதையில் (சிறுவர் கவிதை)

இலங்கையின் ஆற்றல் மிக்க – மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய, இசைத் துறைக்கு பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு கொண்டு வரும் வகையிலேயே "**தென்றலின் தேடல்**" எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- உருவகக் கதைகள்
- சிறுகதைகள்

**சமூகப் பணிகள்**

**திருமணத்திற்கு முன்**

- சாய்ந்தமருது முன்னேற்ற இளைஞர் பேரவை.
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.
- Y.M.M.A-சாய்ந்தமருதுக் கிளை
- இஸ்லாமிய இளைஞர் இலக்கிய வட்டம்.- இவைகளில் செயலாளராகப் பணிபுரிந்துள்ளார்.

**சமூகப் பணிகள் (தற்போது)**

- அஹதியா அறநெறிப் பாடசாலை (அதிபர்/ஏறாவூர் இணைப்பாளர்)
- இஸ்லாமிய மறுமலர்ச்சி மன்ற ஆலோசகர்.


**கிடைத்த விருதுகள்**

- சாமஸ்ரீ சமூகஜோதி (ஷம்சுல் உம்மா) -2008
- காவிய பிரதீப (கவிச்சுடர்) -2013
- சாய்ந்தமருது மருதம் கலைக்கூடல் மன்றம் வழங்கிய **"கவிமொழி"** பட்டம்.
- பல்வேறு கவிதை, சிறுகதைப் போட்டிகளில் பெற்ற சான்றிதழ்களும், விருதுகளும்

இவ்வாறாக தனது வாழ்நாளின் பெரும்பகுதியைச் சமய, சமூக, கலைத் துறைக்காக அர்ப்பணித்துச் செயற்பட்டு வரும் மருதூர் ஜமால்தீனின் பணிகள் தொடர வேண்டுமெனவும், இவரால் எதிர்காலத்தில் வெளிக் கொணரப்படவுள்ள நூல்கள் தங்கு தடையின்றி வெளிவரத் **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது.

-சிறுகதை-

# பீடாக்காரன்



## கலாபூஷணம் தாழை.செல்வநாயகம்

"வா ங்களன்...... வாயில போட்டுக்கிட்டுப்.... போங்களன். இந்தக் குரலின் சொந்தக்காரன் அவன் தான் பீடாக்காரன் வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய தமிழ் பேசும்மக்கள் வாழுகின்ற அனைத்துப் பேருந்து நிலையங்களிலும் இவன் காட்சிய ளிப்பான்.

சுள்ளியான தோற்றம். காகத்தின் நிறத்தை விடச் சிறிது வெள்ளையாக இருப்பான். நீளக்காற் சட்டை, கறுப்புக் கோட்டு அதற்குப் பொத்தான்கள் இல்லை. தலையில் ஒரு பன்தொப்பி அணிந்திருப்பான்.

அவனது இடுப்பிற்கு மேல் நெஞ்சின் கீழாக ஒரு பலகையிலான பெட்டி. அதற்குப் பட்டிபோட்டுத் தோளிற்கு மேலாகக் கட்டியிருப்பான்.

"கிறிஸ்மஸ்" காலத்தில் சவுக்கு மரக் கந்துகளைச் சோடிப்பது போல், மின்சாரப் பல்ப்புகளால் சோடித் திருப்பான். இரவு வேளைகளில் மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குச் செல்லும் பேருந்து வண்டிகளில் பல வர்ண வெளிச்சங்கள் ஜொலித்துக் கொண்டிருப்பது போல், அவனது பீடாப்பெட்டி ஜொலித்துக் கொண்டி ருக்கும்.

**"வண்டி சென்று விடும் நான் நின்று விடுவேன்"** அந்தப் பீடாக்காரன் தான் வந்து விட்டான். அவனைக் கண்டு விட்டால் எனக்குச் சந்தோசம்... அவன் பேசுவதை யெல்லாம் மெய்மறந்த நிலையில் நான் ரசித்துக் கொண்டிருப்பேன்.

நானும் அவனைப் போல் காடுகள், தேசங்கள் அனைத்தும் சுற்றி வருபவன். எனது தொழில் அப்படிப்பட்டது. அவனைப் பற்றி நான் நன்றாக அறிந்திருக்கிறேன். இருபத் தைந்து சதக் குற்றியைக் கொடுத்து அவனிடம் "பீடா" வாங்கி, வாயில்

போட்டு மென்று ருசிப்பதில் எனக்கு அலாதிப் பிரியம். இப்போது ஒரு பீடாவின் விலை இருபத்தைந்து ரூபாய்.

**"ஐயா! டியூட்டியா?....."** என்று என்னிடம் கேட்பான்.

நான் இப்போது பதியத்தலாவைக்கு செல்லும் பேருந்து வண்டியைப் பார்த்துக் கொண்டு, **"அம்பாறை"** பேருந்து நிலையத்தில் நின்று கொண்டு, பீடாக்காரனுடன் கதைத்துக் கொண்டிருக்கிறேன். பீடாக்காரனின் மார்பில் பீடாப் பெட்டி கிடப்பது போல் எனது தோளில் துப்பாக்கி கிடக்கும்.

அப்போதெல்லாம் ஆயுதக்குழுக்கள் தோற்றம் பெறவில்லை. நான் தான் முதன் முதலில் துப்பாக்கியுடன் காடு கரம்பைகள் எல்லாம் சுற்றி வருபவன். அதனை நினைக்கும் போதெல்லாம் இன்றும் பெருமையடைவேன். மட்டக்களப்பு வனக் காரியாலயத்தின் கீழ் தொழில் புரிந்த வன அதிகாரிகளில் நான் ஒருவன் தான் துவக்கு தூக்கிக் கொண்டு கடமைக்குச் செல்லும் வன அதிகாரியாகப் பெயர் பெற்றிருந்தேன்.

கொழும்பு தலைமைக் கந்தோரிலிருந்து, காடுகளைச் சுற்றிப் பார்க்க வரும் காட்டு ராஜாமாரின் ஜீப் வண்டிகளில் துவக்குடன், முன் ஆசனத்தில் இருப்பவனும் நான் தான். காட்டுப் பாதைகளில் கரடி, புலிகள் குறுக்கிட்டால் துவக்குடன் பாய்ந்து சுட்டுக் கலைத்து விடுவேன்.

மாதமொன்றுக்கு ஒரு தோட்டாப் பெட்டி கிடைக்கும். அதிலுள்ள சன்னத் தோட்டாக்களை இரண்டாகப் பிரித்துக் கட்டி, எவருக்கும் தெரியாமல் காட்டுக்கோழி, முயல்களைச் சுட்டுக் கறி சமைத்து விடுவேன்.

என்ன சார்.... துவக்கோட சுற்றித் திரியிறயள்.... இறைச்சி ஏதும் அம்பிடாதா? கிடைச்சாக்கா..... என்னையும் கொஞ்சம் கவனியுங்க சார்!.....

கல்முனைப் பேருந்து நிலையத்தில் வைத்து, அந்தப் பீடாக்காரன் என்னிடம் கேட்டு விட்டான். அவனும் நானும் மிக நெருங்கிய கூட்டாளிகளாக மாறிவிட்டோம்.

ஊரில் கோவில் திருவிழாக்கள் தொடங்கிவிட்டால் அவன் பாடு கொண்டாட்டம் தான். கோவில் தெருவீதிகளைச் சுற்றிச் சுற்றி வலம் வந்து பீடா விற்பான். **"ஜில் ஜில் பீடா"... வாங்களன் வாயில் போட்டுப் போங்களன்..."** அவன் வெறும் பீடாக்காரன் மட்டுமல்ல. ஒரு கவிஞனும் கூட.

**"ஜில்.. ஜில்.. நீ இந்தியக்காரனா?... இலங்கையனா?..... மலைநாடா?...."** என்று யாரும் கேட்டு விட்டால், அவனுக்குப் பொல்லாத கோபம் வந்து விடும்.

**"நான் ஒரு வீதிப்பாடகன். என் பெயர் ஜில்..ஜில்.."** என்று கூறி விட்டுப், பீடா விற்பதில் கண்ணாயிருப்பான்.

**"வாங்களன்...! ஜில்.. ஜில்.. பீடா". "ஒரு கிள்ளுகி ஒரு தள்ளு... ஒரு மெல்லு..."** வண்டி சென்று விடும்..... நான் நின்று விடுவேன்.

நான் அவனுடன் பழகிய நாட்களில் சில விடயங்களை அவன் பற்றி அறிந்து கொண்டேன். அவன் வெறும் பீடாக்காரன் மட்டுமல்ல. தெருப்பாடகனாகவும் விளங்கியவன். அவன் பதுளை மாவட்டத்தைச் சேர்ந்தவன். அவன் பிறந்த கிராமம் சரியாகத் தெரியவில்லை. என்னிடம் அதனை மூடி மறைத்து விட்டான்.

மட்டக்களப்பு பதுளை வீதியில் அந்நாட்களில் வாரச் சந்தைகள் நடைபெறும். பிபிலை தொடக்கம் பதியத்தலாவ, சேரன்கடை, மஹா ஓயா, புல்லுமலை, கிரான் ஆகிய ஊர்களில் எல்லாம் வாரத்தில் ஒருநாள் அடுத்தடுத்துச் சந்தைகள் நடக்கும். சந்தைகள் நடக்கும் நாட்களில் எல்லாம் அங்கு பீடாக்காரனையும் சந்திக்க முடியும். அந்த ஊர்களிலுள்ள சிறுசேனைச் செய்கையாளர்கள் வனதிணைக்களத்துடன் ஒப்பந்தம் செய்து, காடு வெட்டி சேனைப் பயிர்கள் செய்வதுடன், வனதிணைக்களத்தால் வழங்கப்படும் மரக்கன்றுகளையும் பெற்று நட்டு மீள் காடு வளர்ப்பில் ஈடுபடுபவர்கள். அவர்கள் வாரம் ஒரு நாள் கூடும் சந்தைக்கும் வருவார்கள். அவர்களைச் சந்திக்கச் செல்லும் நான் பீடாக்காரனையும் சந்திக்கத் தவறுவதில்லை.

சந்தையில் சலங்கைச் சத்தம் கேட்கும் இடத்தினைக் கவனித்தால் அவன் நின்று கொண்டிருப்பான். அவன் பின்னால் இளைஞர்கள் கூட்டம், சிறுவர் கூட்டம் எல்லாம் கூடி விடும். அவனது பாட்டிலும், பேச்சிலும் மயங்கிய அவர்கள் மெய் மறந்து போவார்கள். அவன் பின்னாலேயே அந்தக் கூட்டத்தினரும் சுற்றி வருவார்கள். பீடா வாங்குவதற்குக் காசில்லாமல் நிற்பவர்களையும் அவன் லேசில் கண்டுபிடித்து விடுவான். அத்தனை ருசிமிக்கது. அவனது பீடா– வாயில் போட்டு மெல்லுவதற்கு ஆசை. ஆனால் காசிதான் இல்லை. அப்படியானவர்களைக் கண்டுபிடித்து இரகசியமாக ஒரு பீடாவைத் தூக்கிக் கொடுத்து ஓடி விடு. யாரிடமும் சொல்லி விடாதே.... என்றும் கூறிவிடுவான்.

காசு வாங்காமல் சும்மாவும் பீடா கொடுக்கிறான்- என்று சனங்கள் அறிந்து விட்டால், அவன் பாடு அதோ கதிதான் என்பதும் அவனுக்குத் தெரியாமலில்லை.

வாரச்சந்தை கூடும் நாட்களில் அவனுக்குப் பெண் சினேகிதிகளும் ஒரு சிலருள்ளார்கள் என்பதும், எனக்குத் தெரியாமலில்லை. அவனது அழகில் மயங்கியல்ல.... அவனிடம் ஒருபீடாவை ஓசியில் வாங்கி, வாயில் போட வேண்டுமென்று சில பெண் பிள்ளைகள் அவன் பின்னால் திரிவார்கள். சில பேர் இருக்கிறார்கள்... ஓசியில் வாங்கி வெற்றிலை போடுவது. பீடி குடிப்பவனைக் கண்டால் அவனிடம் பீடிக் குறளையாவது வாங்கி ஒரு டம் இழுப்பது போன்ற செயல்களில் இன்பம் காண்பார்கள்.

அதனால் தான் என்னவோ.... எம் மத்தியில் ஒரு பழமொழியும் உள்ளது. **"ஓசியில் கிடைச்சா... பொலிடோலும் குடிப்பா போல..."** நான் நாட்டுப் பிரச்சினை காரணமாக ஓய்வு பெறும் கடைசி வயது வரையும் வேலை செய்யாது, பென்சனுக்கு எழுதிக் கொடுத்து விட்டு குடும்பத்தாருடன் கொழும்புக்கு ஓடி விட்டேன்.

நாற்பத்துநாலு வயதில் ஓய்வு பெற்றதால் எடுக்கும் பென்சன் பணம் காணாத நிலையில் இருந்தேன். பீடாக்காரனின் நிலையும் அப்படிப்பட்டது தானாம்.....

பத்திரிகை நிறுவனம் ஒன்றில் வேலை செய்த எனது நண்பனின் துணையுடன் அப்பத்திரிகை நிறுவனத்தில் **"ஒப்பு நோக்குனர்"** பதவிக்குத் தெரிவானேன். பத்திரிகை நிருபராகக் கடமையாற்றிய அனுபவமும் எனக்கிருந்தது. சேரிப்புறமொன்றில் ஒரு பரப்புக் காணி வாங்கி, சொந்தத்தில் வீடு கட்டி, குடியிருப்பாளனாகி, வாக்காளர் இடாப்பிலும் பதிவு செய்தாகி விட்டது. பத்திரிகை நிறுவனத்தில் கிடைக்கும் ஊதியத்தை விட தூதுவராலயங்களில் வேலை செய்தால் கூடிய சம்பளம் கிடைப்பதாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்த எனது இன்னுமொரு நண்பர் கூறினார். அவனது உதவியால் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பல நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினேன். அங்கு செய்தி வாசிப்ப வர்களுக்கான குரல் தேர்விலும் தெரிவானேன். அதனையும் விட ஜப்பான் தூதுவராலயத்தில் எனக்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவியும் கிடைத்தது.

எதனைச்செய்வது என்று தெரியாத நிலை... பீடாக்காரனின் நிலையும் அதுதானாம். என்று அவன் ஒருநாள் என்னிடம் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. எந்தப் பேருந்து நிலையத்திற்கு சென்று கூடிய பணம் சம்பாதிக்கலாம் என்ற சிந்தனைதான் அவனுக்கும்.

**"செக்குறுட்டி"** வேலை செய்வது என்பது சுலபமான காரியம் இல்லை. இரவு வேலை கிடைத்தால் வங்கிளாவைச் சுற்றிவர வேண்டும். நேரத்திற்கு

நேரம் **"பஞ்சிங்"** செய்ய வேண்டும். சிலர் கதிரையில் அமர்ந்தவாறு காலை ஆட்டிக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் நித்திரை செய்கிறார்கள் என்ற சங்கதி எனக்கு மட்டும்தான் புரியும்.

**"கள்ளனுக்குத் தான் இன்னொரு கள்ளனைப் பற்றித் தெரியும்"** என்பது பழமொழி. பால்சேனையில் செக்குறுட்டி வேலை செய்த எனது இன்னுமொரு நண்பனும் அப்படித்தான் காலை ஆட்டியவாறு தூங்கிக் கொண்டு கடமையாற்றியதாக நான் கேள்விப்பட்டுள்ளேன்.

ஜில் ஜில்லும் அப்படித்தான். பீடாப்பெட்டியுடன் நடையில் செல்லும் போதே ஒரு கண்ணுக்குத் தூங்கி எழுந்து விடுவான் - என்ற சங்கதியும் எனக்கு மட்டும்தான் தெரியும். அந்த வேளையினைப் பார்த்து சில களவாணிப் பயல்கள் ஒன்றிரண்டு பீடாக்களைப் பெட்டிக்குள் கைபோட்டு அபகரித்து ஓடிய சம்பவங்களும் நடந்ததுண்டு. ஜில் ஜில்லுக்கும் அது தெரியும்.

என்ன செய்வது? **"பேய்கள் ஆட்சி செய்தால்... பிணந்தின்னும் சாத்திரங்கள்"** என்பது பழமொழி.

ஜில் ஜில்லின் வாழ்க்கையானது பேருந்து நிலையங்களிலும்இ கோவில் திருவிழாக்களிலும்,சந்தை கூடும் நாட்களிலும் கழிந்து விடும். பேருந்து நிலையத்தில் சனங்களின் நடமாட்டம், சூழ் நிலைகளைக் கவனிப்பான். அந்த இடங்களில் பீடா வியாபாரம் போகாது, என்று அறிந்து விட்டால் வந்த வண்டியிலேயே ஏறி, மீண்டும் ஊருக்குக் கிளம்பி விடுவான்.

நான் பதியத்தலாவையில் வேலை செய்தபோது, அன்று சந்தை கூடும் நாள். **"ஜில் ஜில்"** பீடாப்பெட்டியுடன் நின்று கொண்டிருந்தான். காலையில் சாப்பிட்ட வாய்க்கு ஒரு பீடா போட வேண்டும் போல் எனக்குத் தோன்றியது. என்னை அவன் கண்டு விட்டான்....

**"வாங்க சார்... காலை சாப்பிட்டாச்சா... பீடா ஒண்ணு போடுங்க சார்..."** என்றான். பீடாவினை வாங்கிக் காசு கொடுக்க ஆயத்தமானபோது.... வாணா சார்.....! உங்களிட்ட சல்லி வாங்கிறதா? என்று கூறிய நல்ல மனமும் அவனிடம் இருந்தது.

உனக்குத் தெரியுமா? **"ஜில்.. ஜில்.."** இந்தப் பதியத்தலாவ ஊரில... அன்று வாழ்ந்த தமிழ் மக்கள் ஐம்பத்தெட்டு வன்செயலில்.... மட்டக்களப்பு வரையில அகதிகளாக உடுத்த உடுப்போட ஓடி, மாதக் கணக்காக **"ஏதிலிகளாக"** வாழ்ந்த வரலாறு.... என்று கேட்க.....

**"எனக்கும் அது தெரியும் சார்..."** என்றான்.

அப்போதுதான் என்னிடம் கூறினான்........

**"ஜில்.. ஜில்.."** பீடா விற்கும் வியாபாரி மாத்திரமல்ல...... அவன் பல பாடல்களையும் இயற்றியுள்ளான்.

**"படுகொலைச் சிந்து"**, **"மலைக்காட்டு மகாராஜா"**, **"குரலோசை"**, **"பரிதாப கீதம்"**, **"அண்ணாவின் மறைவு"** எனும் தலைப்புக்களில் எல்லாம் பாடல் நூல்களை வெளியிட்டுள்ளான்.

என்பனவெல்லாம் பின்னாளில் நானறிந்தவைகள். பழைய சினிமாப் பாடல்களில் வரும் **"மணப்பாற மாடுகட்டி மாயவரம் ஏரு பூட்டி வயல் காட்ட உழுதிப் போடு சின்னக்கண்ணு"** ... என்ற பாடல் மெட்டில் **"ஜில்.. ஜில்.."** அழகாகப் பாடும் பாடலொன்று...

**"இந்தியாவில் பொண்ணைக் கட்டி**
**இலங்கை வந்து மண்ணை வெட்டி**
**கண்ட பலன் ஒண்டுமில்லை சின்னத்தம்பி"**

பேருந்து நிலையத்தில் நின்றவாறு **"ஜபார் சுல்தானின்"** கடந்தகாலச் சம்பவங்களை நினைத்தவாறு நின்று கொண்டிருந்த நான், எனது ஊருக்குச் செல்லும் பேருந்தினை தவற விட்டு விட்டேன். இன்னும் அரைமணி நேரம் நான் கால் கடுக்க நின்றாக வேண்டும்.

(யாவும் கற்பனையல்ல...)



## நகைச் சுவைத் "தென்றல்"

"என்ன கடுமையாக யோசிக்கிறீங்க...."

"50 லெட்சம் ரூபா கேட்டும் அந்தச் சின்ன வீட்டுக்கு விலை கூடச் சொல்லுறாங்க...."

கவிதை

# கனிந்த மனம்



**நாம்** இணைந்த நாள்
நாளானாலும் மறையாது
காவு கொண்ட கனவு
காலத்தை வெல்லாது!
அன்றே அணைத்த நாள்
இன்று போல் இருக்கிது
காலம் கடந்தாலும்
கண்ணீராக மலர்கின்றது!
கண்ணூர் படாத நாள்
காலத்தால் அழியாது
மண்ணோடு மறைந்தாலும்
மாறாது நம் உறவடி!
தொட்டு அணைத்த
தெவிட்டா ஸ்பரிசம்
கட்டி இணைந்தும்
கானல் நீரானது!
விழி பதுங்கி நின்றேன்
மொழி புரியா தவித்தேன்
கழிவிரக்கம் கொண்டேன்
பாவியாகித் தவித்தேன்!
கன்னிகாதாரம் கொண்டாய்
காலத்தை வென்றாய்
எண்ணமெல்லாம் உன்னிடத்தில்
எட்டாக் கனியாகி நின்றாய்!
நினைத்தேன் நின்னடியை
தவிர்த்தேன் தாழாத் துயரில்
அணைத்தேன் தாயன்பை
உணர்ந்தேன் மனதுயரை!
பாவப்பட்ட பாவியாக
பரிதாபம் கொண்டேனடி
ஏகப்பட்ட ஏக்கத்துடன்
கனிந்த மனமாகினேன்!

-உடப்பூர் வீரசொக்கன்-

# ஏனிந்தக் கிறுக்கு

இந்த மழைக் குதைக்க
எவனுமே இல்லையா
முந்திரிகை, மா பூத்தால்
மூத்திரம் பெய்கிறதே!
பாடுபட்டு வயல்க் காட்டில்
பட்டகடன் இறுப்பதற்கு
சூடுபோடும் வேளையிலா
சோவென்று பொழிய
வேண்டும்?
சீட்டுக் காசெடுத்து
குடிசையைச் செப்பனிட
மோட்டுக் கூரையைப்
பிரிக்கும்போதா
முழுக வார்த்துப் போக
வேண்டும்?
குடையைத் தவறவிட்டு
குழம்பிக் கவலையுடன்
நடைபோடும் வேளையிலே
நனைத்துச் சிரிக்கிறதே!

சந்தையில் விலை போகாத
சள்ளல், சூடை மீனை
கொண்டு வந்து வெயிலில் போட
கொட்டுவதேன் இந்த மழை?
ஏனிந்த மழைக்கு என்மேல்
இத்தனை பகுடி, சேட்டை?
நானிதன் கிறுக்கடக்க
நாளெல்லாம் யோசிக்கிறேன்!




-கவிஞர்
செ.குணரத்தினம்

பழவூரான்

# நீத்தார் நினைவு

## கிழக்கின் இலக்கிய விருட்சம்

## அருள். செல்வநாயகம்



மட்டு. மாவட்டத்திலுள்ள அழகிய கிராமமான குருமண்வெளியில் பிறந்த அமரர் அருள். செல்வநாயகத்தின் பணிகள் பலவகைப்படும். சிறுகதை, ஆராய்ச்சி, நாவல், கிராமிய இலக்கியம், நாடகம், கவிதை, கூத்து, சரித்திர நாவல் எனப் பல துறைகளிலும் தனது பன்முக ஆற்றலால் முத்திரை பதித்தவர். அவரது சிறுகதைகள், ஈழநாட்டு வரலாற்றுக் கதைகள்- தாம்பூலராணி என்ற நூல்களாக வெளிவந்துள்ளன. நறுமலர்மாலை, ஈழமும்-தமிழகமும், சீர்பாதகுல வரலாறு ஆகிய ஆராய்ச்சி நூல்களையும் - வாழமுடியாதவன், பாசக்குரல், சூரிய காந்தி ஆகிய நாவல்களையும் - பூசணியாளர், சதாரம் பஞ்சாலி சுயம்பரம் ஆகிய கிராமிய இலக்கிய நூல்களையும், உயிர் ஈந்த ஓவியம் என்ற நாடக நூலையும் எழுதியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் 14 நாடகங்களும், மலேசிய வானொலியில் 15 நாடகங்களும், இலங்கை வானொலியில் 38 நாடகங்களும் எழுதியுள்ளார். அத்தோடு இந்தியச் சஞ்சிகைகளான கலைக்கதிர், தீபம், கலைமகள் போன்ற சஞ்சிகைகளிலும், இலங்கையில் வெளியாகிய தினசரிப் பத்திரிகைகள் - சஞ்சிகைகளிலும் இவரது பல ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

இவ்வாறாக ஆசிரியராக, அதிபராக, இலக்கிய வாதியாக தனது பன்முக ஆளுமையால் முத்திரை பதித்த அருள். செல்வநாயகத்துக்கு **"தென்றல்"** தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.



# சுதந்திரம்

சுதந்திரம் என்பது பேச்சுக்கு மட்டும்தான்
சுதந்திரம் உண்டென்று சொல்லுவோர் யாருண்டு
நிரந்தரமாய் துயில் கொள்வோனைத் தவிர
நிம்மதியுண்டென்று யார் சொல்லக் கூடும்
சுதந்திரம் என்பது ஏழைக்கும் கூட
சொந்த வீடும், உணவும், உடையும்
நிரந்தரமாகக் கிடைத்து விட்டால் -அதைவிட
சுதந்திரம் வேறு என்ன உண்டு
சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் துடிக்கும்
சோக நெஞ்சங்கள் எத்தனை? எத்தனை?

இயந்திர உலகில் ஏழைகள் வாழ
ஏது வழியுண்டு சொல்லுங்கள் கொஞ்சம்
வயலினில் அறுவடை செய்திடக்கூட
வந்ததே இயந்திரம் ஏழை எதை நம்பி வாழ்வான்
சுயநலமுடைய செல்வந்தர் மட்டும்
சொல்லுவாரிது சுதந்திரமென்று
அயல் வீட்டோன் பசித்திருக்க உண்ணாதேயென்று
அன்றொரு அறிஞன் கூறியதுண்டு
தயவாயிதை யார் காது கேட்கும்
தவிப்போர்க்குத் தண்ணீர் தர யாருண்டு?

க.ரெட்டணையா
கன்னன்குடா

சுதந்திரம் எனும் சொல்லைக் கேட்டதுண்டு
சுதந்திரம் வந்து சோறுதான் தருமா?
நிரந்தரமாய் வாழச் சொந்த வீடும்
நித்தம் உழைத்திட நிறைவான தொழிலும்
பரந்த இவ்வுலகில் ஒருத்தருக்கில்லையேல்
பாரினில் அவன் கண்ட சுதந்திரம் என்ன?
பட்டினியில் வாடிப் பச்சைத் தண்ணீரைக் குடித்து
பாலூட்டும் தாய்க்கு ஏதையா சுதந்திரம்
சட்டையுமில்லாமல் சாப்பாடுமில்லாமல் வாடிடும் ஏழைக்கு
சந்தோசம் தருமா இந்தச் சுதந்திரம் வந்து!!!

# படமும் – பதிவும்

- ரவிப்ரியா -











2015 இல் தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்காகத் **"தென்றல்"** நடத்திய முன்னோடிப் பரீட்சை- 04ற்கான பதக்கம் அணிவிக்கும் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 05.09.2015 அன்று **"தென்றல்"** சஞ்சிகை ஆசிரியர் க.கிருபாகரன் தலைமையில் மட்டக்களப்பு கிரான்குளம் சீ மூன் கார்டன் விடுதியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆரையம்பதி அபிராமி ஜுவல்ஸ் தொழிலதிபர் க.பாக்கியராஜா பரீட்சையில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மட்/கொக்கட்டிச்சோலை இ.கி.மி வித்தியாலய மாணவி மோ.சானுகாவுக்கு வெள்ளிப் பதக்கத்தை அணிவித்துச், சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதையும், மற்றும் நான்கு பதக்கங்களைப் பெற்ற மட்/கொக்கட்டிச்சோலை இ.கி. மி.வித்தியாலய மாணவி ச.டிதுர்ஷிகாவுக்கான சிறப்புப் பரிசிலையும் வழங்குவதையும்இ மட்டக்களப்பு மாவட்ட அரச ஒப்பந்தக்காரர் சங்கத் தலைவர் புரவலர் வீ.றஞ்சிதமூர்த்தி பரீட்சையில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மட்/வால்கட்டு அ.த.க. பாடசாலை மாணவி த.சோபினிகாவுக்கு வெள்ளிப் பதக்கம் அணிவித்துச், சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதையும், மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலய மாணவி ச.யுத்திகாவின் வரவேற்பு நடனத்தையும், நிகழ்வில் கலந்து கொண்ட புலமை வெற்றியாளர்கள்- பெற்றோர்களையும் படங்களில் காணலாம்.

(படம் +தகவல் : வா.கிருஷ்ணா, வே.சக்திவேல்)


## "தென்றல்" இன் முயற்சிக்குக்கிடைத்தவெற்றி!!!

## புலமைப் பரிசில் பரீட்சை(2015) இல்

# சித்திபெற்றோர் விபரம்


## இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது!!!

மட்/மட்/கிரான்குளம்
சரஸ்வதி
வித்தியாலயம்




சி.ஜேதுசன்
புள்ளிகள்-163

மட்/ம.மே/
கடுக்காமுனை வாணி
வித்தியாலயம்




ஜெ.லுகர்ஷிகா
புள்ளிகள்-159



ச.சானுசன்
புள்ளிகள்-155

மட்/ம.மே/
அரசடித்தீவு
விக்னேஸ்வரா
மகா வித்தியாலயம்



க. டிபானுஜன்
புள்ளிகள்-155

---

மட்/ம.மே/கொக்கட்டிச்சோலை
இ.கி.மி வித்தியாலயம்



ச. டிதுர்ஷிகா
புள்ளிகள்-176



க. வஜிந்திரா
புள்ளிகள்-161



ச. திவ்வியா
புள்ளிகள்-159

மட்/ம.மே/
அம்பிளாந்துறை
கலைமகள்
மகா வித்தியாலயம்



வே. திவேனிக்கா
புள்ளிகள்-182


மட்/ம.மே/ அம்பிளாந்துறை
கலைமகள் மகா வித்தியாலயம்




வி. ஓவியா
புள்ளிகள்-174

கி. தீபகாந்தி
புள்ளிகள்-158

மட்/ம.மே/ முனைக்காடு சாரதா
வித்தியாலயம்




சி.கோபிநிதன்
புள்ளிகள்-169




ம. டேஸ்கரன்
புள்ளிகள்-157

---

மட்/ம.மே/ வால்கட்டு
அ.த.க. பாடசாலை




த. சோபினிகா
புள்ளிகள்-168




ச. கிதுசன்
புள்ளிகள்-162

மட்/ம.மே/ முனைக்காடு
விவேகானந்தா வித்தியாலயம்



வ. பிரகர்சன்
புள்ளிகள்-165



ப. லுகர்சனா
புள்ளிகள்-158

---

மட்/ம.மே/
முனைக்காடு
விவேகானந்தா
வித்தியாலயம்



பா. சோவிதா
புள்ளிகள்-157

மட்/ம.மே/ மகிழடித்தீவு
சரஸ்வதி வித்தியாலயம்



மே. ஜிர்ஷா
புள்ளிகள்-162




ந. கிரிஷன்
புள்ளிகள்-161



சு. நிருஷிகா
புள்ளிகள்-160

மட்/ம.மே/ மகிழடித்தீவு
சரஸ்வதி வித்தியாலயம்


மட்/மட்/ புனித
சிசிலியா
தேசிய பாடசாலை




வி. மனோசிதன்
புள்ளிகள்-158



மா. மதுஜா
புள்ளிகள்-156



ச.திருஷ்ஷனா
புள்ளிகள்-155



ச.கேய்ஷிகனிஷியா
புள்ளிகள்-168



புலமைப் பரிசில் பரீட்சையில் கிழக்குமாகாணத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை மாணவி பத்மசுதன் தக்ஸநியா (புள்ளிகள்-193) தனதுபெற்றோர், பாடசாலை அதிபர் ஆகியோருடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம். இவருக்குத் “தென்றல்” தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

# புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காகத் "தென்றல்" தொகுத்து வழங்கும் முக்கிய குறிப்புக்கள்



## சேவைகளும் வழங்கும் நிறுவனங்களும்

| சேவைகளும் வழங்கும் | நிறுவனங்களும் |
|---|---|
| 01. காசுக்கட்டளை அனுப்புதலும், மாற்றுதலும் | தபாலகம் |
| 02. பொதிகளை அனுப்புதலும் தந்தி அனுப்புதலும் | தபாலகம் |
| 03. பணத்தைச் சேமித்தலும் காசோலையை மாற்றுதலும் | வங்கி |
| 04. தேசிய அடையாள அட்டையைப் பெறுதல் | ஆட்பதிவுத் திணைக்களம் |
| 05. பிறப்பு – இறப்பு, திருமணப்பதிவுகளைப் பெறல் | பிரதேச செயலகம் |
| 06. விளையாட்டுக் கழகமொன்றைப் பதிவு செய்தல் | பிரதேச செயலகம் |
| 07. கடவுச் சீட்டைப் பெறலும்-புதுப்பித்தலும் | குடிவரவு குடியகல்வுத்திணைக்களம் |
| 08. நாணயங்களை அச்சிட்டு வெளியிடல் | இலங்கை மத்திய வங்கி |
| 09. நன்னடத்தைச் சான்றிதழ் பெறல் | கிராம சேவையாளர் |
| 10. வதிவிடத்தை உறுதிப்படுத்தல் | கிராம சேவையாளர் |
| 11. பொது நூலகங்களைப் பராமரித்தல் | பிரதேச சபை |
| 12. துவிச்சக்கர வண்டிகளுக்கு அனுமதித்தகடு பெறல் | பிரதேச சபை |
| 13. வாக்காளர் அட்டையைப் பெறல் | மாவட்டத் தேர்தல் அலுவலகம் |
| 14. திருட்டுப் பற்றி முறையிடல் | பொலிஸ் நிலையம் |
| 15. மின்சாரம் பெறல் | இலங்கை மின்சார சபை |
| 16. குடிநீர் வசதியை வழங்கல் | நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை |
| 17. தொலைபேசி வசதியை வழங்கல் | ஸ்ரீ லங்கா டெலிகொம் |
| 18. விமான சேவைகள் | ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் |
| 19. பேருந்துக்கான பருவகால அனுமதிச்சீட்டைப் பெறல் | இலங்கைப் போக்குவரத்துச் சபை |
| 20. வியாபார அனுமதிப்பத்திரம் பெறல் | பிரதேச சபை |




- **Dr.K.அருளானந்தம்** (MBBS, D,F,M)
விரிவுரையாளர், சௌக்கியபராமரிப்பு கற்கைகள் பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம். -

ஒருவரது வாழ்க்கையில் கிட்டத்தட்ட அரைவாசிக் கால ஓட்டத்தை முடித்தவர்களாகவும், மிகவும் பிரத்தியேகமான சவால்களை எதிர் கொள்பவர்களாகவும் இந்த வயதினர் காணப்படுவர். மேலும் நேரடியாகப் பொருளாதார, சமூக, மருத்துவ ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்வர். மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த உடற்தொழிற்பாடுகள், உடல் அமைப்புக்கள் சற்று தளர்வடையத் தொடங்கும்.

உடல் நீர்ப்பீடனமும், இதர உடல் பாதுகாப்புப் பகுதிகளும் படிப்படியாகப் பலவீனமடையத் தொடங்கும். இதனால் அதிகளவில் தொற்றா நோய்களுக்கும், தொற்றும் நோய்களுக்கும் உள்ளாக நேரிடும்.

குறிப்பாகத் தொற்றா நோய்களான சலரோகம், உயர் குருதி அமுக்கம், புற்று நோய்கள், மூட்டு வியாதிகள் என்பன தனித்தோ – சேர்ந்தோ தாக்கத் தொடங்கும். இதனால் பலதரப்பட்ட மருத்துவச் சிக்கல்களுக்கு உள்ளாக வேண்டி வரும். இவ்வாறு நீடித்து நிற்கக் கூடிய தொற்றா நோய்கள் படிப்படியாகத் தங்களது சிக்கல் தன்மை களை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். இதற்காக ஒருவர் பல்வேறு மாத்தி ரைகளையும், சிகிச்சை முறைகளையும், சிறப்பு மருத்துவர்களையும் சந்திப்பதுடன்- இவற்றுக்கிடையிலான நேரடி மற்றும் மறைமுகச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையேற்படும்.

தங்களது வாழ்க்கையின் முக்கிய சமூக, குடும்ப வகிபாகங்களை வகித்துக் கொண்டிருப்பதனால், நோய்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கத் தவறி விடுவார்கள். மாறாக உடல் (தொற்றா) நோய்களால் அதிக மன உளச்சலுக்கு உள்ளாகி நிரந்தர நோயாளிகளாவதுடன், தங்களது நோய்களைக் கொண்டே தங்களை அடையாளப்படுத்திக் கொள்வர்.

எனவே மிகவும் வினைத்திறன் கூடிய காலப்பகுதி தவிர்க்க முடியாத காரணங்களினால் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகும். இவற்றுக்கான காரணிகளை ஆராயும் போது மாற்றக் கூடிய காரணிகளும் - மாற்ற முடியாத காரணிகளும் சேர்ந்து காணப்படும்.

வயது, பிறப்புரிமைக் காரணிகள், ஆண் - பெண் பால் வகை என்பன மாற்றாக் காரணிகளாகவும், மாற்றக் கூடிய காரணிகளான உடற்பருமனைக் குறைத்தல், சீரான உடற்பயிற்சி, புகைத்தல் - மது பாவனைக் குறைப்பு, மனதை நேர்த்தியாகவும் - உற்சாகமாகவும் வைத்திருத்தல் என்பவற்றினூடாகவும் சீரான நோய்க் கட்டுப்பாடும், நோயை அறிந்து – அதனைத் தடுத்தலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஆகவே இளவயதுகளில் அதாவது 40 வயதுக்கு மேற்பட்ட காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சமூகப் பழக்க வழக்கங்கள், உணவுப் பழக்கங்கள், உடற் பயிற்சி என்பன மாற்றக் கூடிய காரணிகளாகும்.

ஆகவே இவ்வயதினரை சரியான நேரத்தில் நோய்களைக் கண்டறிந்து -அவற்றைச் சிறந்த முறையில் பராமரிப்பது இன்றியமையாதது. ஆதிக நேரம் தமது குடும்பத்துக்காகவும் - சமூகத்துக்காகவும் உழைக்கும் இவ்வயதினர் மிக முக்கிய சமூகப் பொறுப்புக்களைக் கையிலெடுத்துச் செயற்படுவார்கள். தங்களது இலக்குகளை நோக்கி முயன்று கொண்டிருப்பார்கள். பொதுவாகத் தங்களது வயது வந்த பிள்ளைகளின் திருமண வாழ்வு, உறைவிட வசதிகள் என்பவற்றை வெற்றிகரமாகச் செய்வதற்கு அதிக நேரம் செலவழிப்பர். சமூகத்தின் எந்த வர்க்கத்தினராயினும், எந்த மட்டத்திலுள்ளவராயினும் சமூகத்தில் அதிக பொறுப்பை உணர்ந்தவர்களாக மாறுவார்கள். தொழில் அனுபவமும்- தொழில் அந்தஸ்தும் - சமூக நோக்கும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைவதனால் தங்களை சிறந்த துறைசார் நிபுணர்களாகவும், அனுபவ சாலிகளாகவும் வெளிக்காட்ட முனைவார்கள்.

தங்களது பொருளாதார வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்துவதுடன், தங்களது ஓய்வு நிலை பற்றி அடிக்கடி சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். பெரும்பாலானோர் பேரக் குழந்தைகளுடன் தமது பொழுதைக் கழிப்பதில் விருப்புடன்

இருப்பார்கள். ஒரு முதிர்ந்த பக்குவம்மிக்க வயதினராகக் காணப்படுவதனால் இவர்களை இளையோரும் நன்கு விரும்புவதுடன், தமது உறவுகளை மேம் படுத்தவும் பயன்படுத்துவர்.

இவர்கள் தங்களிலே ஏற்படுகின்ற உடல் ரீதியான மாற்றங்களை ஏற்றுக் கொள்வதுடன்,சிலர் ஏற்க மறுப்பார்கள். உடலில் குறிப்பாகத் தலைமயிர், முகத் தோற்றம் என்பவற்றுக்காக அதிக கவனம் செலுத்துவார்கள். இதே வேளையில் பாலியல் செயற்பாடுகளிலும் பல மாறுபட்ட நோக்கங்களைக் கொண்டிருப்பர்.

---

# நாற்றமிழோ?

-தாமரைத்தீவான், ஈச்சந்தீவு-




தமிழே தமிழே செம்மொழியே,
தமிழர் வாழ்வின் தனி முதலே!
அமுதே அழகே அருஞ்சுவையே,
அன்பே அருளே அறநெறியே!

வளர்ந்தாய் தொடராய் வளர்கின்றாய்,
வானம் வரையும் வளர்வாயே!
தளர்ந்தாய் பகையால் தளர்ந்தாலும்,
தமிழர்க்கெல்லாம் தாய் நீயே!

வெல்வாய் யாவும் வெல்வாயே,
வேந்தும் நாடும் வீழினுமே!
நல்லாய்-நாவில் நடமாடும்
நற்றமிழே புவித் தொற்றமிழே!

மூன்றாய் வந்தாய் நான்கானாய்,
முத்தமிழ் இனிமேல் நாற்றமிழோ?
ஆன்றோர் சான்றோர் குறைவேனும்
ஆம் மறவோம் நீ வாழ்வாயே!





**நூல் :- உடப்பு நாட்டார் வழக்காற்றில் திரௌபதை**

**ஆசிரியர் :- உடப்பூர் வீரசொக்கன்**

**வெளியீடு :- உடப்பு இளம் தாரகை வட்டம்**

இந்நூலில் உடப்பின் நாட்டாரியற் பதிவுகளை சடங்குகள், வழிபாடுகள், வாய்மொழிப் பாடல்கள், கூத்துக்கள் என்ற வகையில் நூலாசிரியர் வகைப்படுத்தியுள்ளார். இவர் ஒரு பத்திரிகை யாளராக, கலை- இலக்கியவாதியாக, வெளியீட்டாளராக எனப் பல்வகைப் பரிமாணங்களுடன் கலை - இலக்கியப் பொக்கிஷங்களைப் பேணிப் பாதுகாத்து வருவது கண்கூடு.

---




**நூல் :- தாலாட்டு**

**ஆசிரியர் :- மீரா முகைதீன் ஜமால்தீன்**

**முகவரி :- 116, புதிய வீதி, ஏறாவூர் - 01.**

**விலை :- ரூபா.50**

இந் நூல் சின்ன வயதிலே சிறார்கள் மதப்பற்றுடனும், நல்ல ஒழுக்கப் பண்பு நிறைந்தவர்களாகவும் வாழ வேண்டுமென்ற நோக்கோடு முழுப்பிரசவமாக வெளிவந்துள்ளது. இவர் பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளார். அத்தோடு **"தென்றல்"** சஞ்சிகைக்காகப் பல்வேறு கவிதைகளையும் வாழ்வியல் நடைமுறைகளோடு ஒட்டியதாக எழுதி வருகிறார். இவரின் எழுத்தாக்கல் பணிகள் தொடரத் **"தென்றல்"** வாழ்த்துகிறது

# இலக்கிய நயம்

—கலாபூஷணம் முருகேசி தம்பிப்பிள்ளை—




சிலப்பதிகாரத்தின் ஜீவநாடியே கண்ணகியின் கையில் விளங்கும் சிலம்பு! புகார்க் காண்டத்தில் அது ஒலியாக, மதுரைக் காண்டத்தில் அது உண்மையின் உருவமாக, வஞ்சிக் காண்டத்தில் அது தன் புகழ் பரப்பிப் பாண்டியனை வெற்றி கொண்டு மதுரையை எரித்து கண்ணகியைக் கற்புக்கரசியாக்குகிறது. கற்புடைய பெண்ணின் சிறப்பை உலகுக்கு வெளிப்படுத்தவே ஐம்பெரும் காப்பியங்களின்முதல் நூலுக்கு இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் எனப் பெயர் சூட்டினார்.

மேலும் சூழ்வினைச் சிலம்பு; அணி சிலம்பு; சீறடிச் சிலம்பு; சித்திரச் சிலம்பு; போற்றருஞ் சிலம்பு செய்வினைச் சிலம்பு; செம்பொற் சிலம்பு; இணையரிச் சிலம்பு; பொற்றொழிற் சிலம்பு; பொற் சிலம்பு; பொன்னருஞ் சிலம்பு; அணிமணிகாற் சிலம்பு எனப் பல அடைமொழிகளால் சிலம்பைச் சிறப்பித்துக் கூறியுள்ளார் இளங்கோவடிகள்.

இச் சிலம்பையே அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதற்கும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுவதற்கும், ஊழ்வினை உறுத்துவோர்க்கு வந்தூட்டு வதற்கும் இச்சிலம்பையே இளங்கோவடிகள் ஆதாரமாகக் கொண்டார். பாண்டிமாதேவி யின் சிலம்பு ஊழ்வினை வந்தூட்ட உதவுகிறது. கண்ணகியின் ஒரு தனிச்சிலம்பு அரசியல் பிழைத்தோர்க்குத்துணை நின்றது. கண்ணகியின் மற்றச் சிலம்பு பாண்டியனோடு வழக்குரைத்து வென்ற கண்ணகியை உரைசால் பத்தினியாக்கி உயர்ந்தோர் ஏத்த வழி செய்வதாகவுள்ளது.

**"தெய்வச் சிலம்பு"** – சிலப்பதிகாரத்தில் கண்ணகி மாளிட மகளாகவிருந்து தெய்வச் சிலம்பினால் தெய்வத் தன்மை பெறுகிறாள். வழி நூல்கள் எல்லாம் கண்ணகியைக் காளியின் அவதாரமாகக் கூறித் தெய்வமாக வெளிப்படுத்துகின்றன. கண்ணகி பிறக்கும் போது சிலம்பு கூடவே பிறக்கிறது. அதனால் தெய்வத் தன்மையைச் சிலம்பு பெறுகிறது.

**"வலது கால் செஞ்சிலம்பு இடது கைச் செப்போடு**
**கழுத்திலே பூமாலை கன்னம் வழியாக**
**கன்னத்து வழியாகக் கட்டழகி பிறந்தாள்"**

-என்று கண்ணகியுடன் சிலம்பும் பிறந்ததாகக் கோவலன் கதை கூறுகிறது. கோவலன் கண்ணகியிடம் மதுரை சென்று சிலம்பை விற்கக் கேட்ட போது கண்ணகி அச்சிலம்பின் தன்மையையும் சிறப்பையும் கூறுகையில்:-

**"கூடப் பிறந்ததொரு கொடியிடையாள் காற்சிலம்பு**
**கன்னான் அறிந்ததில்லை கடைத் தெருவில் போனதில்லை**
**செட்டி அறிந்ததில்லை தராசில் வைத்து நெறுத்ததில்லை**
**ஓடாணி தானுமில்லை உத்தமியாள் காற்சிலம்பு**
**திருகாணி தானுமில்லை தேன்மொழியாள் காற்சிலம்பு"**

-என்று சிலம்பின் தெய்வீகத் தன்மையையும், தன்னுடன் பிறந்தது என்றும் கூறுகிறாள். கண்ணகி இறைவனிடம் வேண்டிய பின்பே ஓடாணியும், திருகாணியும் உண்டாகிற்றாம் என அறிய முடிகிறது.

**"பத்தினிச் சிலம்பு"** –அக்காலத்தில் சிலம்பு அணிபவர்களையே பத்தினியாகக் கொள்வர். நாகமுத்தாள் எனும் பத்தினியே அச்சிலம்புக்கு நாகமணி கொடுத்தாள். அவ்வாறு கொடுக்கும் போது அச்சிலம்பினைப் பத்தினியே அணிய வேண்டுமெனச் சத்தியம் செய்ய வேண்டுமெனக் கூறியே ஐந்துதலை நாகமுத்தாள் மாநாய்கனிடம் கொடுத்தாள். அச்சிலம்பை வாங்க வந்த மதுரை நகரப் பெண்கள்:-

**"தொக்கல்லவே இச் சிலம்பும் மணிச்சிலம்பு றென்றார்கள்**
**தொட்ட பேர்கள் எரிந்திடுவர் இட்டிருந்தால் முடி தெறிக்கும்**
**பத்தினிமார் கால்க் கணிந்தால் இருந்தலம் தீப்பிடிக்கும்"**

என்று கூறி அச்சிலம்பை வாங்க மறுத்தனர். இச்சிலம்பை வாங்க எண்ணிய பாண்டிமாதேவியும் :-

**"இச் சிலம்பை அணிவார்க்கு செட்டி பெண் பூண்ட பணி**
**நான் அடியாளும் ஆக மாட்டேன் தேவியர்க்கும் ஆகாது**
**இச்சிலம்பைத் தொட்டவர்க்கு இட்டிருந்தால் முடி தெறிக்கும்**
**இட்டிருந்தால் முடி தெறிக்கும் இருந்த தலம் தீப்பிடிக்கும்**
**பத்தினிமார் பூண்ட பணி தொக்கல்லவே இச்சிலம்பும்**
**பல ஸ்திரிகளுக்கும் ஆகாது தொட்ட பேர்கள் எரிந்திடுவார்"**

என்று இச்சிலம்பினை வரைவபடுத்தியதால் பத்தினிமார்கள் மட்டுமே

இச்சிலம்பை அணிய முடியும். ஏனையோர் அணிந்தால் அணிந்தவர் சாம்பலாவார்– என்ற கருத்துப் புலப்பட்டது. **"மாணிக்கப் பரலுடைச் சிலம்பு"** –சிலம்பினுள்ளிருந்த மாணிக்கப் பரல் தான் பாண்டியன் கண்ணகியின் வழக்குரையில் தோற்பதற்கும் கண்ணகி வெற்றி பெறுவதற்கும் முக்கிய காரணமாக விளங்கியது.

**"என் காற் பொற்சிலம்பு மணியுடை அரியே**
**எனத் தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி**
**யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே"**

என்று கண்ணகியும் - பாண்டிய மன்னனும் இருவர் சிலம்புகளுக்கு இடையேயுள்ள உள்ளீடுகளை வெளிப்படுத்துவது புலப்படுகிறது.இவ்விடத்தில் மட்டுமே இளங்கோவடிகள் சிலம்பிலுள்ள பரலைக் காட்டுகிறார். அதுவரை சிலப்பதிகாரக் கதையிலே மர்மமாக வைத்துக் கடைசியில் கண்ணகியைக் காற்சிலம்பை உடைக்கச் செய்கிறார். உடைந்த சிலம்பின் மாணிக்கப்பரல் பாண்டிய மன்னன் கோவலனைப் பொற்கொல்லனின் வாய்மொழி கேட்டுக் கொலை குறித்த வாயிலே சிதறித் தெறித்தது. பாண்டியன் வெண்குடை சரிந்து வீழவும் செங்கோல் தளரவும் மன்னன் உயிர் விடவும் பாண்டிமாதேவி உடன்கட்டை ஏறவும் காரணமாகிற்று. கண்ணகியின் சிலம்பின் உள்ளிருந்த மாணிக்கப் பரல்களே வழக்கின் உண்மைச் சாட்சியாக விளங்கியதால் வழிநூல்கள் சிலம்பைப் போன்று கண்ணகிக்குத் தெய்வீகத்தையும், பத்தினித் தன்மையையும் வழங்குகின்றன.

குழந்தை கண்ணகியைப் பொற்பேழையிலே வைத்து வைகையிலே விட்ட போது ஐந்து தலை நாகமொன்று பேழையில் இருந்த குழந்தை காளியென எண்ணித் தன்னிடமிருந்த நாகமணியை அப்பேழையுள் உமிழ்ந்து வைத்தது. அந்நாகமணியானது குழந்தையின் உடம்பில் எவ்விடத்திற்கும் பொருந்தாததினால் அதனைக் குழந்தையின் காற்சிலம்பில் வைத்து அச்சிலம்புக்கு **"நாகமணிச் சிலம்பு"** எனப் பெயரிடப்பட்டது.

சிலம்பின் உள்ளிருந்த பரலுக்குக் கொடுத்த முக்கியத்துவம் சிலப்பதிகார வழக்குரையின் போது வேறு எதற்கும் கொடுக்கப்படவில்லை. மணப் பருவமடைந்த கண்ணகிக்கு விலையுயர்ந்த அணிகலன்களை அளிக்க விரும்பிய மாநாய்கன் செட்டி வேறு யாராலும் பெற முடியாத நாகமணியைக் காற்சிலம்பினுள் வைக்க விரும்பிச் சோழநாட்டின் தீவொன்றில் அம்மணி இருப்பதாக அறிந்து அழகிய ஒரு கப்பல் கட்டி ஆற்றல் வாய்ந்த மீகாமன் என்பான் செலுத்துகையில் வழியில் வெடியரசன் என்பான் எதிர்த்துப் போரிட்டான். அவனுடன் எதிர்த்து அவன் தம்பிமாரு டன் சமாதானம் செய்து அந்நாகமணி கொண்டு வந்தான்.

மாநாய்கன் நாகமணி பெற ஏழுகடல் தாண்டி நாகமுத்துக் கோட்டைக்குச் சென்றான். **"நாகமுத்தே ! நாகமுத்தே !"** என்று அழைக்க நாகமுத்தாள் வெளியே

வந்தாள். கண்ணகையின் காலணியான நாகமணிச் சிலம்பினுள் வைக்க நாகமணி தர வேண்டும் என்றான். அது கேட்டநாகமுத்தாள்:-

**"இந்த நல்ல நாகமுத்து பத்தினி மார்க்கல்லால்**
**எல்லார்க்கும் ஆகாது பல கைந்தொடி மார்க்காகாது**
**தொக்கல்லவே நாகமணி கர்ண ணகெய்யாள்க் கல்லாமல்**
**தொட்டவர்கள் எரிந்திடுவர் வேறொருவர் பூணொண்ணாது**
**இட்டிருந்தால் முடிதெறிக்கும் வேறொருவர் பூணவில்லை**
**இருந்த தலம் தீப்பிடிக்கும் என்றாணையிட்டால் நாகமணி தருவேன்"**

என்று சொன்னதால் மாநாய்கன் செட்டி சத்தியம் செய்கிறான். உடனே ஐந்து தலை நாகம் வெளியே வந்து நாகமணி உமிழ்ந்து மாநாய்கன் கையில் கொடுத்தது. கண்ணகியின் வழக்கில் முக்கியத்துவம் பெற்ற மாணிக்கத்தின் சிறப்பு கொண்டு அதற்குத் **"தெய்வீகச் சிறப்பு"** ஏற்பட்டது. அதனை அணிபவரும் பத்தினியாய் இருக்க வேண்டுமென்பதால் அதன் சிறப்பு மேன்மை பெறுகிறது.

**சிலம்பின் புலம்பல்**

வழி நூல்கள் எல்லாம் கண்ணகியைத் தெய்வமாக்கியதால் கண்ணகி அணிந்திருந்த சிலம்பும் தெய்வத் தன்மை பெறுகிறது. கண்ணகி அவள் சொக்கநாதனை நினைந்து கணவனின் துயர் துடைக்கக் கழலுகிறாள். அப்போது மணிச்சிலம்பானது புலம்புகிறது.

**"கழற்றாதே கண்ணகியே! கணவனுக்குத் தீங்கு வரும்**
**தென்மதுரை போனாரானால் செத்து மடிந்திடுவார்**
**வடமதுரை போனாலே மாண்டு மடிந்திடுவார்**
**இந்தப் பயணமது இனித் திருப்பப் போவதில்லை"** - எனச் சிலம்பு புலம்பி

அழுவதைக் கேட்ட கண்ணகி மதுரை செல்ல வேண்டாம். கும்பகோணம், மயூரம் போகலாம் என்றாள். விதி எவ்வழி சென்றதோ அவ்வழி செல்லக் கோவலன் மதுரை சென்றான். பேசாத பொருள் பேசியதும் விசித்திரமானதே! மதுரை அழிந்து போகச் சாபமிட்டதும் தெய்வச் சிலம்பே! சிலம்பு சிதறியதால் மதுரை எரிந்தது. சிலப்பதிகாரத்தில் சிலம்பு கண்ணகியை வெல்லச் செய்கிறது. கண்ணகி சிலம்பை உடைத்து உண்மையை வெளிப்படுத்திப் பாண்டியனை வழக்கில் வெல்கிறாள். அத்தோடு தனது இடது முலையைத் திருகி எறிந்து, மதுரையை மும்முறை வலம் வந்து, எரித்தாள். கண்ணகிக்குச் சேரன், செங்குட்டுவன் இமயக் கல்லெடுத்து வந்து நீர்ப்பீடனம் செய்து தெய்வச்சிலை வடித்துப் பெருவிழா எடுக்கவும் கண்ணகியின் சிதறிய சிலம்பே காரணமாக அமைந்தது எனலாம்.

ஆற்றுகைகளுக்கும் - ஆற்றுகைக் கலைகளுக்குமிடையே நிகழ்த்தும் முறை, நிகழ்வை உள்வாங்கும் முறை என்பவற்றுக்கிடையே பாரிய வேறுபாடுகள் உள்ளன.

ஆற்றுகை, ஆற்றுகைக் கலைகள், அரங்கக் கலைகள் என்பன சாராம்சத்தில் ஒன்று போலத் தெரியினும் இவற்றினிடையே பாரிய வேறுபாடுகள் உள்ளன. ஆற்றுவோர், பார்ப்போர் என்ற இரு தரத்தார் இவற்றிற்குத் தேவை என்பது பொதுப் பண்பாக இருப்பினும் - ஆற்றுகைக்கும், ஆற்றுகைக் கலைகளுக்கும் இடையே நிகழ்த்தும் முறை, நிகழ்வை உள்வாங்கும் முறை என்பனவற்றுக்கிடையே பாரிய வேறுபாடுகள் உள்ளன. இவ்வண்ணமே ஆற்றுகைக் கலைகளுக்கும் - அரங்கக் கலைகளுக்கிடையேயும் வேறுபாடுகளுண்டு.

ஆற்றுகை என்பது ஒருவர் முன்போ – பலர் முன்போ ஒருவரோ அல்லது பலரோ ஒன்றைச் செய்து காட்டுவதாகும். ஆற்றுகை மனித குலத்தோடு இரண்டறப் பிணைந்துள்ள ஒருசெயலாகும். ஆற்றுகையின்றி மனித குலம் சமூகமாக இயங்க முடியாது. பிறந்த குழந்தையைத் தாலாட்டிச் சீராட்டுவது தொடக்கம் இறந்த பிணத்தைக் குளிப்பாட்டி, சடங்காசாரங்களுடன் புதைப்பது அல்லது எரிப்பது வரைப் பல்வேறு

# ஆற்றுகையும் ஆற்றுகை கலைகளும்



பேராசிரியர் சி. மௌனகுரு

ஆற்றுகைகளை மனித சமூகம் தத்தம் பண்பாடுகளுக்கு ஏற்ப நிகழ்த்திக் கொண்டே இருக்கிறது. பிறப்பு தொடக்கம் இறப்பு வரையான இடைப்பட்ட பகுதியில் கோயிற் சடங்கு – கிரியைகள், திருவிழாக்கள், திருமணச் சடங்கு, பொழுது போக்கு நிகழ்வுகள், விளையாட்டுக்கள், வேடிக்கைகள், கலை வெளிப்பாடுகள் எனப் பல்வேறு விதமான ஆற்றுகைகளை மனிதர் தம் வாழ்வில் நிகழ்த்துகின்றனர். இத்தகைய ஆற்றுகைகளுக்கு ஊடாகவே மனிதர் தமக்குள் உறவுகளையும் - தொடர்புகளையும் ஏற்படுத்திச் சமூகமாக வாழ்கின்றனர். ஆற்றுகைகள் சமூக உறவை மாத்திரமன்றி, ஆற்றுவோருக்கும் - பார்ப்போருக்குமான உள அழுத் தங்களையும், உளச் சிக்கல்களையும் தீர்க்கும் நோய்தீர் மருந்தாகவும் செயற் படுகின்றன.

**ஆற்றுகையை நாம் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.**

1.புதிய ஆற்றுகை. 2. மரபு ரீதியான ஆற்றுகை.

மரபு ரீதியான ஆற்றுகையில் இரண்டு பிரதான பண்புகள் பொதிந்துள்ளன.

1.மீளச் செய்தல். 2. தொடர்பு கொள்ளல்.

முன்பு செய்யப்பட்ட ஒன்றை அல்லது நமது முன்னோர் பாரம்பரியமாகச் செய்த ஒன்றை அல்லது யாரோ ஒருவர் அல்லது குழு எங்கோ செய்த ஒன்றை மீளவும் செய்து காட்டுதல் மீளச் செய்தலாகும். மீளச் செய்தல் மூலமாகவே அடுத்த பண்பான தொடர்பு கொள்ளல் ஏற்படுகிறது. மீளச் செய்தலும், தொடர்பு கொள்ளலும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தது.

இவ்விரு பண்புகளூடாகவே சமூகம் பண்பாட்டைப் பேணியபடி தொடர்ச்சியாக இயங்கி வருகிறது. மீளச் செய்யும் போது முன்பு செய்தவற்றிலிருந்து சிற்சில மாறுபாடுகளும் மேற்கொள்ளப்படும். அம்மாறுபாடுகளை காலம், இடம், களம், சூழல் என்பன நிர்ணயிக்கும்.

மீளச் செய்தலில் ஆற்றுவோரின் உடல்மொழி, குரல், அசைவுகள், ஆடை – அணிகள், காண்பியங்கள், ஆற்றுகைக்குத் துணை புரியும் ஏனைய பொருட்கள் என்பன தொடர்பு கொள்ளும் ஊடகங்களாகச் செயற்படும்.

உதாரணமாக கோயில்களில் தீமிதித்தலை நாம் ஓர் ஆற்றுகை எனக் கொண்டால், தீமிதிக்கச் செல்லும் தெய்வம், ஏறி ஆடுபவரின் உடல் அசைவுகள், அபிநயங்கள், அவர் அணிந்திருக்கும் உடை, அவர் மேல் பூசப்பட்டுள்ள குங்குமம் - மஞ்சள், அவர் அணிந்திருக்கும் சிலம்பு, கையில் பிடித்திருக்கும் வேப்பிலைக் கொத்து, அவரின் வாயிலிருந்து வரும் **“ஹா”** என்ற உச்சாடனம், தீக்குழி,

அதனைச் சுற்றி அதனை வளர்க்கும் பணியாட்கள், அதற்கு முன்னால் வைக் கப்பட்டிருக்கும் மடை,அதிலுள்ள வாழைப்பழம், பாக்கு, வெற்றிலை, அதன் மேல் சாத்தப்பட்டிருக்கும் கமுகம் பாளைப் பூக்கள், தீக்குளியின் முன் நிறுத்தப்பட்டிருக்கும் சூலம், தகதகவெனச் சிவப்பாய் அனல் வீசும் தீக்குளி. இவை எல்லாமே தொடர்பு சாதனங்கள் தான்.

ஆற்றுகையும் அதன் மூலம் கொள்ளும் தொடர்புகளும் மிக முக்கியமானவை. ஆற்றுகையின்றிச் சமூக அசைவியக்கம் இல்லை. ஆற்றுகைகள் அதிகமுள்ள சமூகம் விசைவேகம் (Dynamic) கொண்ட சமூகமாக இருக்கும். ஒரு குழுமத்தி னது அல்லது ஒரு சமூகத்தினது அல்லது ஒரு குழுவினது ஆற்றுகை அக்குழுமத் தின் - சமூகத்தின்- குழுவின் பண்பாட்டையும் உளவியலையும் அறியும் திறவு கோலாகும்.

**ஆற்றுகைக் கற்கை நெறி**

ஆற்றுகைக் கற்கை நெறி இன்று பிரபலமான கற்கைநெறியாக மேற்குலக நாடுகளில் கற்பிக்கப்படுகிறது. மனித முரண்பாடுகளுக்கான மானுட – சமூக சிக்கல்களுக்கான காரணத்தை ஆராயப் புறப்பட்ட ஆய்வாளர்கள் ஆற்றுகைகளுக்கூடாக அதனைக் காண முயன்றதும், வெற்றிகளீட்டியதும் இக்கற்கை நெறி சிறப்பாக வளரக் காலாயின எனலாம்.

இக்கற்கை நெறி சம்பந்தமான தனிப்பட்ட கோட்பாடுகளைக் கூறாவிடினும் தத்தம் கட்டுரைகளிலும் நூல்களிலும் ஆற்றுகை பற்றிக் கூறிய நவீனரக சிந்தனையாளர்களான சிக்மனட் புறொய்ட், கால் மாக்ஷ், பிரடரிக் நியட்சே தொடக்கம் லூயிஸ் அல்தூசர், வால்டர் பெஞ்சமின்,ரேமன் வில்லியம்ஸ், தெரிதா, பூக்கோ, எட்வேட் செயித் ஊடாக டிலியூஸ், கட்டாரி, யூடித் பட்லர் வரையுள்ளோரின் ஆற்றுகை பற்றிய கருத்துக்களை தனது **"Theory of performance studies"** எனும் நூலில் அறிமுகம் செய்கிறார் பிலிப் ஒஸ்லேன்டர்.

இவர்களுக்கு முன்னரேயே மேற்குலகிலும், கிழக்குலகிலும் ஆற்றுகை பற்றிக் கூறிய பல் அறிஞர்களையும் காண்கிறோம். அரிஸ்ரோட்டில் தொடக்கம் பரதமுனிவர் வரை என நாம்இவர்களை வரையறுக்கலாம்.

ஆற்றுகை அறிஞர்களதும், சிந்தனையாளர்களதும் கவனத்தை ஈர்த்துள்ளது என்பதே இதன் சாராம்சமாகும். தனித்துவமான ஒரு துறையாகவும், கோட்பாடாகவும் இவ் ஆற்றுகைகற்கை 1970 க்குப் பின்னரே மேற்கிளம்பியது. இதன் ஸ்தாபகர்களுள்

முக்கியமானவர் ரிச்சட்செக்னராவார். இவர் "Easays on performance studies" எனும் நூலை வெளியிடுகிறார். இதன்பின்னர் ஆற்றுகைக் கற்கை நெறியானது கோட்பாடுகளூடாகவும் - ஏனைய அறிவியல் துறைகளை இணைத்ததன் மூலமாகவும் மீள் உருவாக்கம் பெற்று மானுடவியல், சமூகவியல், அரங்கியல், பின் அமைப்பியல், பெண்ணியல் கற்கைகள், கலாசாரக் கற்கைகள் போன்ற , போன்ற பல்வேறு கற்கைகளுக்கூடாக செழுமை பெற்று இன்று ஆற்றுகைக் கற்கை என்பது மானுட குலத்தின் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும், முரண்பாட்டையும், உளவியலையும் அறியும் பாட நெறியாக மாறியுள்ளது.

இக்கற்கைநெறி எல்லாப் பக்கங்கங்களிலிருந்தும் வரும் ஆய்வாளர்களுக்கு திறந்து விடப்பட்டிருக்கிறது. சமூகத்தை அறியப் புறப்படும் சமூக விஞ்ஞானிகளும், மாற்றச் செயற்படும்செயற்பாட்டாளர்களும் இக் கற்கை நெறியால் கவரப்படுகின்றனர்.

பல்வேறு துறைகளையும் உள்ளடக்கி வளரும் இக்கற்கைநெறி தனக்குள் சமூகவியல்,மானுடவியல், பேச்சுத் தொடர்பாடல், இலக்கியம், இசை, தத்துவம், நடனக் கற்கைகள், பண்பாட்டுக் கற்கைகள், புவியியல் உளவியல், அரசியல்ஆகிய சகல நெறிகளையும் உட்கொண்டு பரந்துபட்டதொரு பார்வையைத் தரும் கற்கை நெறியாக உருவாகியுள்ளது.

**ஆற்றுகைக் கலைகள்**

பிறப்பு தொடக்கம் இறப்பு வரை மனிதகுலம் சமூக உறவுகளைக் கொள்வதற்காக நடத்தப்படும் ஆற்றுகையிலிருந்து ஆற்றுகைக் கலைகள் வேறுபடுகின்றன. கலைக்குரிய அளவு கோல்கள் உள. ஒழுங்கு, அழகு, நேர்த்தி, படைப்பாக்கம், உணர்வுகளைத் தூண்டல், பரவசமாக்கல், மனதைச் சாந்தப்படுத்தல், பொழுது போக்கு, மகிழ்ச்சி என்பனவெல்லாம் கலைகளை ஆற்றுகையிலிருந்து பிரித்துக் காட்டும் அம்சங்களாகும்.

ஆற்றுகையிலும், ஆற்றுகைக் கலைகளிலும் பார்ப்போருடன் உறவு கொள்வதே சராம்சமாக இருப்பினும், நிகழ்த்தும் முறைகளிலும் - ஆற்றுவோருக்கும் - ஆற்றப்படுவோருக்கும் இடையேயுள்ள உறவுகளிலும் வித்தியாசங்கள் உள்ளன. அவைக்காற்றுகைக் கலை ஆற்றுவோரின் உடல் அங்கங்களின் அசைவுகள் முக்கியமாக முகம், குரல் அங்கத்தில் செய்யப்படும் ஆஹார்யம் (ஒப்பனை,ஆடை, அணிகள்) என்பனவற்றின் மூலம் பார்ப்போருடன் தொடர்பு கொள்ளும் கலை அவைக்காற்றுக் கலையாகும்.

"Performing Art" எனும் சொல் ஆங்கில மொழியில் 1711 இல் அறிமுகமானது என்பர். அவைக்காற்றுக் கலை என்ற சொல் 1980 களில் ஈழத்தமிழர் மத்தியில் அறிமுகமானது. அதற்கு முன்னர் இது அளிக்கைக் கலை, நிகழ்த்தும் கலை, நிகழ் கலை என்ற பெயர்களில் அழைக்கப்பட்டது.

ஆற்றுகைக் கலைகளுள் நடனம், இசை, ஒபேரா, நாடகம் என்பன அடங்கும். சாக்கஸ் கலையையும் இதற்குள் சிலர் அடக்குவர்.

**நடனம்**

நடனம் என்பது அங்கம், பிரதியங்கங்களை ஒரு லயத்திற்கும், தாளத்திற்கும் அசைப்பதன் மூலம் உருவாக்கப்படும் கலையாகும். பண்பாட்டிற்குப் பண்பாடு அசைவு, ஆஹார்யம் என்பன வேறுபடும்.

கேரளத்தின் கதகளி நடனத்தையும், சிங்கள மக்களின் கோலம் நடனத்தையும் ஒப்பிடுமிடத்து கதகளி நடனத்தின் ஆடை அணி, முக அலங்காரம் என்பன கேரள மக்களின் வரலாற்றோடும் - பண்பாட்டோடும் இணைந்து காணப்பட, சிங்கள மக்களின் கோல நடனத்தின் ஆடை, அணிகளும், முகமூடியும் இவர்களின் பண்பாட்டோடு இணைந்து காணப்படுகிறது.

மேற்கத்தேய நடனத்தையும், கீழத்தேய நடனத்தையும் இவ்வண்ணமே ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

**ஒபேரா**

ஒபேரா என்பது ஐரோப்பிய இசை நாடகமாகும். சங்கீதத் தன்மை பொருந்திய நாடகம் என்று இதனை அழைக்கலாம். இவ் இசை நாடக ஆற்றுகையில் நடிப்பு, பிரதி (இலக்கியம்), காட்சிகள், அசைவுகள், உடை, ஒப்பனை என்பவற்றுடன் நடனமும் இடம்பெறும். இது ஒரு பெரிய அரங்கில் நிகழ்த்தப்படும். இதனை நிகழ்த்துவதற்கு உதவியாக ஒரு பெரும் வாத்தியமும் - குழுவும், அதை இயக்க ஒரு தலைவரும் இருப்பர். மேற்கத்தேய ஒபேரா, சீன ஒபேரா, ஜப்பானிய ஒபேரா, எனப் பல ஒபேரா வகைகள் உண்டு. இது தமிழ் மரபிலும் உண்டு. இது தமிழில் கூத்து, இசை நாடகம், நாட்டிய நாடகம் எனப் பிரிந்து கிடக்கிறது. இசை ஒலியை அடிப்படையாகக் கொண்ட இசை வடிவம் இது. இசை என்பது பண்பாட்டிற்கும், சமூகத்திற்கும் ஏற்ப வேறுபடும். ஒத்திசைவுகள் நேர் நிலையிலும், ராகங்கள் கிடை நிலையிலும் இசையிற் காணப்படும் என்பர். இசையை

அவைக்காற்றும் முறையில் பண்பாட்டிற்குப் பண்பாடு வேறுபாடுகளுண்டு. கர்நாடக இசை அளிக்கை முறையையும், ஜாஸ் இசை அளிக்கை முறையையும் ஒப்பிடின் பண்பாட்டு வேறுபாடுகளைக் காண முடியும்.

**நாடகம்**

நாடகம் என்பது செய்யப்படுவது ஆகும். இது செய்கையிலிருந்து வந்தது. ஒன்றைப் போலச் செய்தல் நடிப்பாகும்.

**அரங்கு**

நாடகத் தன்மை வாய்ந்த ஒரு பொய்மையை பார்வையாளர் முன் உருவாக்குதலை இங்கு பார்ப்போம். ஆற்றுவோர் என்ற இரு தரத்தினர் முக்கியமானவர்களாயிருப்பர். நிகழிடமும் இங்கு முக்கியம் பெறும். இவை அனைத்தையும் இணைப்பதற்கே அரங்கு என்ற பதம் தேவைப்படுகிறது.

**சர்க்கஸ் கலை**

சர்க்கஸை ஒரு கலையாகச் சிலர் கணிப்பதுண்டு. இங்கு கலைக்குரிய ஒன்றைப் போலச் செய்தல், திறன்களை வெளிப்படுத்துதல் என்பன காணப்படுவதால் இதனையும் ஓர்கலை என்பர்.

இவ் ஆற்றுகைக் கலைகள் யாவும் அவைக்கு ஆற்றப்படுவதுடன்- பார்ப்போரை உணர்வு பெறச் செய்வதான கலையின் இயல்புகளைக் கொண்டிருப் பதனால் அவை யாவும் அவைக்காற்றுக் கலைகளாகின்றன.

(நன்றி –சர்வதேச எழுத்தாளர் மாநாட்டு மலர்)


---

**பாடசாலை அதிபர்களின் கவனத்திற்கு....**

இவ்வாண்டு(2015) தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு வெகுவிரைவில் நடைபெறவுள்ளதால் மட்டக்களப்பு கல்வி வலயம், மண்முனை மேற்கு கல்வி வலயம், மட்டக்களப்பு-மத்தி கல்வி வலயம், கல்குடா கல்வி வலயம், பட்டிருப்பு கல்வி வலயம் ஆகியவற்றின் கீழுள்ள பாடசாலை அதிபர்கள் கல்வி அபிவிருத்தி ஒன்றிய மட்டு.மாவட்ட இணைப்பாளருடன் (0772381455) தொடர்பு கொள்ளுமாறு இணைப்பாளர் **அல்ஹாஜ் ஏ.எல்.மீராசாகிபு** கேட்டுள்ளார்.

# சமைக்கலாம் வாங்க...!!!

## பால்கோவா







**தேவையான பொருட்கள்**

கோதுமை மா - ஒரு கப்

அஸ்ரா - ஒரு கப்

சீனி - மூன்று கப்

பயறு - 100g

தேங்காய்ப் பால் - ஒரு கப் (துலப்பால்)

வனிலா - சிறிதளவு

மாஜரின் - சிறிதளவு







**செய்முறை :**

- சீனியையும், மாவையும், தேங்காய்ப் பாலையும் இட்டுப் பிசைதல்.
- அதனை அடுப்பில் வைத்துக் காய்ச்சுதல்.
- பின் திரண்டு வந்ததும், பயறு (வறுத்த)- வனிலா என்பவற்றை இட்டுக் காய்ச்சுதல்.
- திரண்டு வந்ததும் மாஜரின் பூசிய தட்டில் இட்டுத் துண்டுகளாக வெட்டி எடுத்தல்.

தொகுப்பு :-

திருமதி கவிதா கிருபாகரன்

ஆரையம்பதியில்.....
அழகிய 22 கரட்.
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம்
செய்ய
வேண்டிய ஒரே
இடம்
தங்க நகைகளின்
சொர்க்காபுரி



அபிராமி ஜீவல்ஸ்



பிரதான வீதி
ஆரையம்பதி - 02
தொ.பே : 065 - 3644944
077 - 6506329
AD/0008

அழகிய 22கரட் தங்கநகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள நாட
வேண்டிய தங்கநகைகளின் சொர்க்காபுரி



சொர்ணம்
நகை
மாளிகை

AD/0040


16, புனிதஅந்தோனியார் வீதி, மட்டக்களப்பு.
T.P: 065 2222152

212, 214 பிரதானவீதி, கல்முனை.
T.P: 0672229121/2229860

59, மட்டக்களப்புவீதி, கல்முனை.
T.P: 067 2220191

**Ladshana Stamp**

**-Computer Rubber Stamp Maker-**




**# 39A, Baily Road, Arasady, Batticaloa.**

**Tel: 065 222 4048, 077 69 155 74.**

**e-mail: ladshana@gmail.com**

AD/0024

இல.21

# தென்றலின் குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | | 5 |
| 6 | | | ■ | 7 | | ■ | |
| 8 | | | | ■ | 9 | 10 | |
| | ■ | | ■ | 11 | | | ■ |
| ■ | 12 | | 13 | | ■ | 14 | 15 |
| 16 | | ■ | | ■ | 17 | ■ | |
| 18 | | 19 | ■ | 20 | | 21 | |
| 22 | | | | ■ | 23 | | |

## இடமிருந்து வலம்

01. **"ஆன்மாக்களின் தலைவன்"** என்ற கருத்தைத் தரும் சிவபெருமானின் பெயர்.
04. ஜனநாயகத்தேர்தல் முறையில் மக்களிடம் உள்ள ஆயுதம்.
06. பல்வேறு விதம்.
07. மணமகளின் வேலி.
08. அழுகையில் ஒரு விதம்.
09. அன்பளிப்பு.
11. மூவிடங்களுள் ஒன்று. (திரும்பியுள்ளது)
12. சிவபெருமானின் வில். (குழம்பியுள்ளது)
14. **"இல்லை"** என்பதை மறுத்தல். (திரும்பியுள்ளது)
16. மன்மதனின் மனைவி. (திரும்பியுள்ளாள்)
18. யானைப் படம். (திரும்பியுள்ளது)
20. கம்பன் புதுமையானவன் என்பதைக் குறிக்கும் சொல். (குழம்பியுள்ளது)
22. மேய்ச்சல் தரை. (குழம்பியுள்ளது)
23. இதன் சொல்லுக்கும் சோதிடபலன் பார்ப்பர். (குழம்பியுள்ளது)

## மேலிருந்து கீழ்

01. சொந்த இடமின்றி அலைந்து திரிபவன்.
02. சுத்தம் இதைத் தரும்.
03. சிறு பிள்ளைகளின் விளையாட்டுப் பொருள்.
04. இளைஞன்.
05. திரிகடுகத்தொன்று. (தலைகீழ்)
10. ஒழுங்கு
11. நாகணவாய் புள்.
12. குழப்படி செய்யும் குழந்தைகளை அடக்கும் மந்திரக்கோல்.
13. பழம்.
15. மாலையில் மலரும் பூக்களுள் ஒன்று.
16. பயம்.
17. சூகரம். (தலைகீழ்)
19. நீராடு.
21. நோ.

விடைகளை இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் எழுதிக் கத்தரித்து. தபால் அட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

தபால் உறைக்குள் வைத்து அனுப்பப்படும் கூப்பன் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர் களில். குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக300/- 200/-, 100/- வழங்கப்படும்.

போட்டி முடிவுத்திகதி 01.12.2015

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :-

**"தென்றல்"**
**குறுக்கெழுத்துப் போட்டி இல. 21**
**44/1, பழைய கல்முனை வீதி, கல்லடி,**
**மட்டக்களப்பு.**

**குறுக்கெழுத்துப் போட்டி - 20**
**இற்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மு | 2 க | 3 வ | 4 ரி | | 5 நா | 6 க | ம் |
| 7 து | ரு | ம் | பு | | 8 த | ம் | பி |
| மை | ம் | 7 பு | | 9 ர | ம் | தா | |
| | பு | | 10 து | மா | | | 11 சு |
| 12 த | | 13 க | 12 ரு | ம | 14 ம் | | ப |
| 15 வ | 16 ன | ம் | | 17 ம் | ள | 18 தா | வே |
| 19 நி | ம் | ம | 20 தி | | 21 ள் | பி | ளை |
| 22 லை | கா | | 23 சை | ச் | ப | | |

**தென்றல் குறுக்கெழுத்துப் போட்டி இல-20 இல் வெற்றி பெற்றோர்**

**முதலாம். இடம்**
யோசப் டொரிங்டன் ஸ்பெக்
59/01,
லேடி மனிங் டிறைவ்,
மட்டக்களப்பு.

**இரண்டாம் இடம்**
திருமதி ல.தங்கராசா
மட்/ஆரையம்பதி இ.கி.மி
வித்தியாலயம்,
ஆரையம்பதி.

**மூன்றாம் இடம்**
ப.புவஸ்ரிகா
**"மலரில்லம்"**.
செக்கடி வீதி,
களுவாஞ்சிகுடி.

**பாராட்டுப்பெறுவோர்**
**இ. துவாரகா**
கண்டி
**ம. டிதுஷ்ரிகா**
மண்டூர்
**வ. புவனலோஜினி**
வவுனியா
**மு. தர்மா**
திருகோணமலை




# மட்டக்களப்பு-முகத்துவாரம் லைற்ஹவுஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய பரிசளிப்பு!!!



மட்டக்களப்பு – முகத்துவாரம் லைற் ஹவுஸ் விளையாட்டுக் கழகத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழா 30/08/2015 அன்று மேற்படி விளையாட்டுக் கழகத் தலைவர் கே.சிவனேசராசா தலைமையில் லைற்ஹவுஸ் மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், கிழக்கு மாகாணப் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றியீட்டிய கழகங்களுக்கு வெற்றிக் கிண்ணங்களையும், பணப்பரிசில்களையும் வழங்கி வைத்தனர். இப் போட்டியில் முதலாம் இடத்தினை கல்லடி கடல்மீன்கள்விளையாட் டுக் கழகமும், இரண்டாம் இடத்தினை கூழாவடி டிஸ்கோ விளையாட்டுக் கழகமும், மூன்றாம் இடத்தினை சீலாமுனை ஜங்ஸ்டார் விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன.



### புலமைத்தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காகத்

# "தென்றல்" நடத்திய முன்னோடிப் பரீட்சை-04 இல் சித்திபெற்றோர்

**மட்/கடுக்காமுனை வாணி வித்தியாலயம்**

1.ச.சானுசன்-159புள்ளிகள்
2.வ.தனுலக்சி-125புள்ளிகள்
3.இ.விதுர்சன்-114புள்ளிகள்
4.ச.தவசிகா-112புள்ளிகள்
5.கு.உஷாளினி-116புள்ளிகள்
6.ர.சாளினி-123புள்ளிகள்
7.சி.சிவானுசன்-150 புள்ளிகள்
8.பு.ஜிவேனுகா-102புள்ளிகள்
9.தி.கிருத்திகா-110புள்ளிகள்

**மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்**

10.ந.குகனியா-168புள்ளிகள்
11.லோ.சரணியா-159புள்ளிகள்
12.ஆ.டிலுக்ஷா-153புள்ளிகள்
13.சு.திவாகரி-133புள்ளிகள்
14.ச.ஜிவேனிதா-145புள்ளிகள்
15.சி.ஜேதிசா-108புள்ளிகள்
16.இ.விதுஷா-100புள்ளிகள்
17.சு.யுஸ்மியா-100புள்ளிகள்
18.இ.டிலக்ஷனா-107புள்ளிகள்
19.ஜெ.லுகர்ஷிகா-151புள்ளிகள்
20.சு.சுஜெனியா-120புள்ளிகள்
21.தி.ஹர்ஷாணி-158புள்ளிகள்
22.க.யதுஷாயினி-113புள்ளிகள்
23.க.திசானிகா-147புள்ளிகள்
24.தெ.டனுப்பிரியா-139புள்ளிகள்
25.க.ஜருணாஹரன்-100புள்ளிகள்
26.சு.கவிகரன்-104புள்ளிகள்
27.சி.யேதிஷன்-174புள்ளிகள்
28.ப.பிரவீன்-102புள்ளிகள்
29.வா.வானுஜன்-101புள்ளிகள்
30.ப.அபிலாஷ்-144புள்ளிகள்
31.சி.தளிரகன்-101புள்ளிகள்
32.இ.யதுஷன்-129புள்ளிகள்
33.கு.டனோத்-103புள்ளிகள்
34.கு.யுபீஜனன்-126புள்ளிகள்

**மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்**

35.த.இந்துஜா-130புள்ளிகள்
36.ப.லுகர்சனா-172புள்ளிகள்
37.து.பகவதன்-173புள்ளிகள்
38.உ.கிறிஸ்சிகா-128புள்ளிகள்
39.கி.ஜனகன்-159புள்ளிகள்
40.தி.தர்சிகா-134புள்ளிகள்
41.பா.சோவிதா-164புள்ளிகள்
42.வ.பிரகர்சன்-168புள்ளிகள்
43.அ.சத்தியப்பிரகாசினி-148புள்ளிகள்

**மட்/அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயம்**

44.பா.அனுசன்-135புள்ளிகள்
45.க.டிபானுசன்-174புள்ளிகள்
46.த.கவிசங்கரி-126புள்ளிகள்
47.யோ.டிலக்ஷன்-131புள்ளிகள்
48.ர.கஜதீபன்-157புள்ளிகள்
49.சி.கரிதுஜன்-169புள்ளிகள்
50.பா.தர்சினி-152புள்ளிகள்
51.பி.றக்சனா-106புள்ளிகள்
52.ச.தேவகுமார்-120புள்ளிகள்
53.சி.வித்தகன்-139புள்ளிகள்
54.த.அர்ச்சனா-127புள்ளிகள்

**மட்/கொக்கட்டிச்சோலை இ.கி.மி.வித்தியாலயம்**

55.ச.வர்மிதன்-125புள்ளிகள்
56.நா.கஜானன்-166புள்ளிகள்
57.வி.யதிசன்-168புள்ளிகள்
58.நா.ரனோஜன்-157புள்ளிகள்
59.ச.டிதுர்ஷிகா-181புள்ளிகள்
60.மோ.சானுகா-180புள்ளிகள்
61.சா.தரணி-144புள்ளிகள்
62.ச.துர்ஷா-140புள்ளிகள்
63.ச.திவ்வியா-172புள்ளிகள்
64.க.வஜிந்திரா-178புள்ளிகள்
65.த.கஜரூபன்-143புள்ளிகள்
66.சி.அவிநயன்-148புள்ளிகள்
67.ஜ.சரண்ராஜ்-133புள்ளிகள்
68.க.விசுதா-138புள்ளிகள்
69.சி.கலிஸ்ரா-144புள்ளிகள்
70.கு.டனுசிந்-157புள்ளிகள்
71. க.நிதுர்ஷன்-154புள்ளிகள்
72.பி.தினேஸ்கரன்-124புள்ளிகள்
73.ப.யனுசன்-115புள்ளிகள்
74.அ.சனுசன்-154புள்ளிகள்
75.ம.விதுசியா-119புள்ளிகள்
76.ய.கரணியா-127புள்ளிகள்
77.வி.கனிஸ்ரா-118புள்ளிகள்

**மட்/வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்**

78.சோ.ஜெயதர்மினி-154புள்ளிகள்
79.சோ.ஜெயதாரணி-156புள்ளிகள்
80.தி.விவேக்கா-152புள்ளிகள்

**மட்/வால்கட்டு அ.த.க. பாடசாலை**

81.த.சோபினிகா-180புள்ளிகள்
82.பு.ஷர்மிகா-131புள்ளிகள்
83.பு.தர்மிகா-160புள்ளிகள்
84.ச.கிதுசன்-156புள்ளிகள்
85.த.பேனுஜா-102புள்ளிகள்
86.க.குபதீபன்-115புள்ளிகள்

**மட்/முனைக்காடு சாரதா வித்தியாலயம்**

87.இ.விவேக்காந்-101புள்ளிகள்
88. சி.கோபிநிதன்-139புள்ளிகள்
89.ம.டேஸ்கரன்-157புள்ளிகள்
90.ப.நிலுக்ஷி-135புள்ளிகள்
91.கு.கஜேந்தினி-154புள்ளிகள்
92.த.விசித்திரா-138புள்ளிகள்
93.நா.கேதீஸ்வரி-100புள்ளிகள்
94.வே.உசாநந்தினி-152புள்ளிகள்
95.வி.நிதர்சனா-113புள்ளிகள்
96.ச.சிந்துஜன்-110புள்ளிகள்
97.வே.கவிநிதன்-113புள்ளிகள்
98.பு.கிருசாந்-101புள்ளிகள்
99.இ.பிரபா-104புள்ளிகள்
100.மா.மிதுஷன்-106புள்ளிகள்
101.வ.சிதுஜா-135புள்ளிகள்
102.ந.டிலோஜினி-131புள்ளிகள்
103.சு.நிலானி-109புள்ளிகள்
104.து.மிதுஷன்-102புள்ளிகள்

**மட்/அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம்**

105.வி.ஓவியா-178புள்ளிகள்
106.இ.தமிழ்ரூபிகா-163புள்ளிகள்
107.கி.தீபகாந்தி-158புள்ளிகள்
108.சு.தனுஸ்பிரியன்-126புள்ளிகள்

**மட்/படையாண்டவெளி அ.த.க.பாடசாலை**

109.பா.கோவர்த்தனா-140புள்ளிகள்
110.வி.யதுர்ஷிகா-125புள்ளிகள்
111.இ.யனுஸ்தா-112புள்ளிகள்

**மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்**

112.கி.கிஷோமியா-155புள்ளிகள்
113.அ.விபிசன்-158புள்ளிகள்
114.மா.மதுஜா-152புள்ளிகள்
115.பு.நிலுக்ஷன்-105புள்ளிகள்
116.ஈ.சதுாஸ்சினி-121புள்ளிகள்
117.கோ.கஜகோ-118புள்ளிகள்
118.அ.சுமித்திரன்-110புள்ளிகள்
119.சு.நிருஷிகா-163புள்ளிகள்
120.ச.திருஷ்ஷனா-166புள்ளிகள்
121.சி.டினுஸ்கா-127புள்ளிகள்
122.சி.டெனுஷன்-119புள்ளிகள்
123.பு.மயுரன்-133புள்ளிகள்
124.வி.மனோசிதன்-147புள்ளிகள்
125.நி.கோவித்தியா-106புள்ளிகள்







யாழ்.தினக்குரல் பத்திரிகை நிறுவனத்தால் கிழக்குமாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு 40 துவிச்சக்கரவண்டிகள் 4/10/2015 அன்று மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலையில் வைத்துவழங்கப்பட்டன. நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தலைவர் அல்ஹாஜ் ஏ.எல்.மீராசாகிபு மங்கல விளக்கேற்றுவதையும், அதிதிகளாகக் கலந்து கொண்ட கருணைப் பாலத் தலைவர் ரி.பரமேஸ்வரன், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எம்.உதயகுமார், மட்டக்களப்பு மாவட்ட சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தலைவர் அல்ஹாஜ் ஏ.எல்.மீராசாகிபு ஆகியோர் துவிச்சக்கரவண்டிகளை வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம்.



IELTS
PREPARATION CLASSES
@
Headway
Register Now
IELTS™
EXAM PREPARATION
T: 0654924042



SLIIT
COMPUTING
Certificate Courses
@
Headway
SLIIT COMPUTING
T: 0654924042



SPOKEN
ENGLISH
@
Headway
சிறந்ததொரு
எதிர்காலத்திற்கான
ஆரம்பம்
HW
T: 0654924042

HW

# HEADWAY
## SCHOOL OF LANGUAGES

Batticaloa Office:

**Headway Kids' Corner**

YMCA Building, Boundary Road (South),
Batticaloa. T : 065 2225612

*Enjoy Learning English*

AD/0006

வணசிங்கா பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.